# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜுன் 2004 ஜீவியம் 10 மலர் 2

இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| எங்கள் குடும்பம் | 3 |
| சாவித்ரி | 24 |
| லைப் டிவைன் | 26 |
| அன்பர் கடிதம் | 38 |
| பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி | 41 |
| லைப் டிவைன் - கருத்து | 46 |
| இதுவோ உம் ரௌத்திரக் கருணை | 48 |
| அஜெண்டா | 55 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 57 |
| இந்தியாவின் இன்றைய தேவை தொழில் முனைவர்கள் | 61 |


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

## இம்மாதச் செய்தி

# இறைவனின் கருணை இக வாழ்வில் செயல்படுவது பண்பு.



## எங்கள் குடும்பம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

பார்ட்னர் : இந்த பாக்டரி விஷயங்களுக்கு எல்லாம் நீங்கள் பொறுப்பேற்பீர்களா?

தாயார் : அன்னை கூறியவற்றை நான் கூறலாம். என் கணவருக்கோ, உங்களுக்கோ, நான் புத்திமதி சொல்லக்கூடாது. அது முறையன்று.

கணவர் : உனக்குத் தெரிகிறது. எனக்குத் தெரியவில்லை.

தாயார் : தெரிந்தாலும் சொல்லாமலிருப்பது என் கடமை.

பார்ட்னர் : தெரிந்தவர், தெரியாதவர்க்குச் சொல்லாமலிருக்கும் கட்டுப்பாடு உயர்ந்தது. சரி, நாங்கள் கேட்டுச் செய்கிறோம்.

பெரியவன் : இனிமேல், இது அம்மா பாக்டரி. நீங்கள்தான் சேர்மன்.

பார்ட்னர் : ஒரு கம்பெனியைப் பற்றி 8 கோடி, 80 கோடி என்று ஒரு முறை சொன்னது ஞாபகம் வருகிறதா? அது என்ன?

தாயார் : ஒரு கம்பெனி நஷ்டத்திலிருப்பதால் நம் முறைகளைக் கடைப்பிடிக்கும் கன்சல்டண்ட்களைக் கூப்பிட்டார்கள். ஜூன் மாதம் கான்ட்ராக்ட் எழுதினார்கள். ஏப்ரல் முதல் பேச்சுவார்த்தை நடந்தது. மாதம் 5 கோடி முதல் 6 கோடிவரை வசூலாகிறது. 7½ கோடி வசூலானால் கட்டுப்படியாகும். நம் கான்ட்ராக்ட் எழுதும் முன்னே force செயல்பட்டது 8 கோடி வசூலாயிற்று.

கன்சல்டண்ட் தீவிரமாக வேலை செய்கிறார். கம்பெனிக்குச் சந்தோஷம். 30 மாதமாக ஒரு முறையும் அந்த 8 கோடி வசூலாகவில்லை.

பார்ட்னர் : தவறு எங்கே?

தாயார் : கன்சல்டண்டிற்கு நம்பிக்கை பணத்தில், வேலையில். அன்னையிலில்லை, ஜீவனிலில்லை.

பார்ட்னர் : 80 கோடி என்பதென்ன?

தாயார் : எப்படி நாம் வேலையை ஆரம்பிக்குமுன் 8 கோடி வந்ததோ, அதேபோல் ஜீவனுடன் வேலை செய்தால் 80 கோடி அதே மாதம் வரும்.

கணவர் : அது பல இடங்களில் பார்த்திருக்கிறேன். ஜீவனோடு என்றால்.....

பார்ட்னர் : ஆர்வத்துடன்.

தாயார் : உண்மையுடன்.

பெண் : பக்தி, நம்பிக்கையுடன்.

பெரியவன் : குதர்க்கமில்லாமல்.

சிறியவன் : அம்மா சொற்படி.

பார்ட்னர் : நமக்கு இதுவரை அப்படித்தானே நடக்கிறது.

தாயார் : இது 8 கோடிபோல் நாம் ஆரம்பிக்கும்முன் தானே நடப்பது.

கணவர் : ஆரம்பிக்கவே பயமாகயிருக்கிறது. 1 மாதம் நாம் அனைவரும் அன்னைச் சட்டப்படிச் செயல்படலாமா?

தாயார் : அது செய்தால் போதும்.



பார்ட்னர் : அது என்ன என்று சொல்லவில்லையே.

கணவர் : அனைவருக்கும் தெரியும்.

அவரவரும் குதர்க்கம், கேலி, கிண்டல், பராமுகம், அதிகாரம், பொறாமை, வம்புப் பேச்சு, ஆகியவையில்லாமல் அன்னை நினைவுடன், சமர்ப்பணத்தை முடிந்தவரை ஏற்று முழுக் கட்டுப்பாட்டுடன், மனத்தால் அடக்கமாகச் செயல்பட்டு ஆயிரம் நல்லவை நடப்பதைக் கண்டு 1 மாத முடிவில் மீண்டும் ஒன்று சேர்ந்தனர். இதற்குள் ஏற்பட்ட ஆயிரம் நல்ல விளைவுகளால் அன்று ஒரு மாதமுன் என்ன வியாபாரம் turnover திட்டமிட்டார்களோ, அது இன்று நிகர இலாபமாகும் நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த 30 நாட்களில் குடும்பங்களின் நிலை 80 நிலைக்கு உயர்ந்துவிட்டதாய்த் தெரிகிறது.

பார்ட்னர் : மதர் பெரிய தெய்வம் என்பதில் ஆட்சேபணையில்லை.

கணவர் : இந்த ஒரு மாதத்தில் வாழ்நாள் முழுவதும் நடக்காதவை நடந்துவிட்டன.

பெரியவன் : அம்மா பேசலாமா?

தாயார் : சந்தேகமானால் பேசாதே.

பெண் : நாமெல்லாம் இன்னும் ஒன்றும் செய்யவில்லை.

சிறியவன் : அப்பா, நடந்தது, நடக்கவேண்டியது, நாம் செய்ய வேண்டியது, எல்லாம் விளக்கமாகச் சொல்லுங்கள். நீங்க கண்டிக்காமல் நாங்கள் திருந்தமாட்டோம். கண்டித்துவிடுங்கள்.

கணவர் : அம்மாவைப் பேசச் சொல்.

தாயார் : மனம் எப்படியிருக்கிறது? அந்தஸ்து என்ன ஆயிற்று? என்று கூறுங்கள்.

பெண் : மனம் காற்றில் பறக்கிறது.

பெரியவன் : பெரிய அந்தஸ்து வந்துவிட்டது.

தாயார் : பணத்தைவிட இவையிரண்டும் உயர்ந்தவை, முக்கியமானவை. அதனால் காப்பாற்றுவது கடினம். கண்டித்தால் குறைந்தபட்சம் காப்பாற்றலாம். தானே திருந்தினால் அதிகபட்சம் வளரும். இது எல்லா அன்பர்கட்கும் தவறாது நடந்தது. காப்பாற்றியவர் குறைவு, கர்வமாக நிமிர்ந்தவர் அதிகம், செய்தவரைக் குறை கூறியவர் உண்டு, எதையும் அறியாதவர் ஏராளம். நாம் எப்படியிருக்கப் போகிறோம்?

கணவர் : நீ சொல்வதுபோல் மனம் நிறைவாக இருக்கிறது என்பது உண்மை. நம்மைவிடப் பெரிய இடங்களிலிருந்து அழைப்பு வந்தால் அங்கெல்லாம் போய்ப் பழகத் தெரியவில்லை.

பெண் : நமக்கு அவர்கள் குறை தெரிகிறது.

பார்ட்னர் : நம்மை அனைவரும் அன்பாகவும், பிரியமாகவும் நடத்தினார்கள்.

பெரியவன் : எல்லோருக்கும் நம் வண்டவாளம் தெரியும்.

தாயார் : நம் வண்டவாளம் வெளிவருமுன் நாமே முயன்று அதை வெளிப்படுத்திவிடவேண்டும்.

பார்ட்னர் : பெரிய இடத்திற்குச் சமமாக நாம் உயர்வது சாத்தியமா?

தாயார் : அன்னையை முன்னிருத்தி முயன்றால் பலன் பேசும்.

கணவர் : அது தெரிகிறது. அங்கேதான் பயமாக இருக்கிறது.



பெரியவன் : அம்மா எனக்குச் சொல்லிக்கொடுங்கள். நான் கற்றுக்கொள்கிறேன்.

சிறியவன் : நானும் வர்ரேன்.

பெண் : ஊம்.

கணவர் : சரி, சொல்லு.

பார்ட்னர் : ரொம்ப சந்தோஷம். அம்மா என்ன சொல்வாங்க, இதைச் சந்தோஷமாகச் செய்யவேண்டும் என்பார்கள்.

தாயார் : இது போதும். குறைந்தபட்சம் சாதிக்கலாம். சந்தோஷமாகச் செய்தால் அதிகபட்சம் கிடைக்கும். நாமனைவரும் பார்ட்னர் குடும்பம் போலிருக்க வேண்டும்.

பார்ட்னர் : எனக்கு உங்களுடைய நம்பிக்கை வேண்டும். தினமும் நாம் சேர்ந்து நடந்தவற்றை விமர்சனம் செய்து, நடக்கவேண்டியதை விவாதித்தால் சரியாகிவிடும்.

தாயார் : அது போதும்.

கணவர் : ஊரில் பாக்டரியைக் கவனிக்காதவரில்லை.

பார்ட்னர் : அதனால் நாம் உஷாராக இருக்கவேண்டும். நல்ல சொல் மட்டுமே நம் மனதில் எழவேண்டும்.

கணவர் : எனக்குப் பெரிய இடத்து அழைப்புதான் டென்ஷன் தருகிறது.

தாயார் : அதுவே செல்வத்திற்கு அறிகுறி. அழைப்பு வந்தவுடன் ஒரு நாள் முழுவதும் அழைப்பிலிருந்தால் டென்ஷன் குறையும்.

கணவர் : அதுவும் பார்த்திருக்கிறேன். மனம் அழைப்பை நாடமாட்டேன் என்கிறது.

தாயார் : வேலை உள்ளேயிருக்கிறது என்பது அதுதான்.

பார்ட்னர் : குறை என்றிருந்தால், முனைந்து களைந்தால் போய்விடும்.

தாயார் : குறை குணமாகி, அது குணத்தின் குறையாகி, சிக்கல், முடிச்சு விழுந்துவிட்டால் எடுப்பது கஷ்டம்.

பெண் : என்னம்மா அது?

தாயார் : நீ நல்ல டிரஸ் வேண்டும் என்றால், பணமிருந்தால் எடுக்கிறோம், இல்லாவிட்டால் இல்லை. இருந்து செலவு செய்ய மனம் வாராதது குறை. நல்ல டிரஸ் போட்டுக்கொள்வது தவறு என நினைப்பது குணம். பெண் மீது பொறாமைப்படும் தாயார் பணம் செலவு செய்யமாட்டாள், நல்ல டிரஸ் வாங்கமாட்டாள், தன் பெண்ணுக்குக் கொடுக்கக் கூடாது என்பது அடுத்த கட்டம். அதைக் குறை, குணம், குணக்குறை எனவும், சிக்கல், முடிச்சு எனவும் கூறுகிறோம்.

பெண் : அவற்றையெல்லாம் என்ன செய்வது?

தாயார் : அவையெல்லாமிருந்தால் கூடவே பொய், கேலி, குதர்க்கம், குத்தல், கிண்டல், வெறியேற்றுவது வந்துவிடும்.

பெண் : அப்படிப்பட்ட தாயார் முதலில் அவற்றிற்கெல்லாம் இங்கே பணமில்லை என்பாள். அல்லது உனக்கு அப்படிப்பட்ட டிரஸ் கேட்கிறதா என்பாள். எந்த ராஜாவைக் கட்டிக்க இந்த டிரஸ் தேவை, பாரேன் நினைப்பை, என்ன டிரஸ் கேட்கிறாள் என்று பேச்சு வரும்.



தாயார் : நீ விவரமாகச் சொல்கிறாய்.

பெண் : நீங்க அழகாகப் பேசவேண்டும் என்பதை இப்படியெல்லாம் பேசக்கூடாது என்பதா?

பார்ட்னர் : இங்கே பிரச்சினை என்ன? கொடுக்க மனம் வரவில்லை, சிறிய மனசு. அதனால் பரந்த மனம் முக்கியம்.

கணவர் : நாம் அடிப்படையில் மாற வேண்டும், அளவுகடந்து உயர வேண்டும், அபரிமிதமான பெரிய மனசு வேண்டும், இது சரியான திருவுருமாற்றம். ஏன் அன்னை இருந்தவரை அவரைத் தமிழ்நாடு அறியவில்லை, உலகமறியவில்லை என இப்பொழுது விளங்குகிறது. மனிதன் மட்டமானவன், சிறியவன், இவனால் உயர முடியாது.

பார்ட்னர் : சைத்தியப்புருஷன், ஜீவாத்மாவைவிட நமக்குப் பலன் தருவதிலும், உண்மையிலும் உயர்ந்தவன் என்பதை அறிய விரும்புகிறேன்.

தாயார் : ஜீவாத்மா என்பது spirit, சைத்தியப்புருஷன் என்பது spirit in life. ஒரு கம்பெனியின் கொள்கை போன்றது ஜீவாத்மா. நடைமுறையில் அக்கொள்கைகளைப் பின்பற்றுவது சைத்தியப்புருஷன்.

கணவர் : Punctualityஐ உதாரணமாக்கிச் சொல்லேன்.

தாயார் : ஒரு கம்பெனியில் ஆண்டுதோறும் punctualityஐப் பற்றி சொற்பொழிவாற்றுகிறார்கள், இந்தக் கம்பெனியின் உயிர்நாடி punctuality என்கிறார்கள், டைரக்டர் மீட்டிங்கில் punctuality அழுத்தமாகப் பேசப்படுகிறது. அது கொள்கை, ஜீவாத்மா போன்றது.

நடைமுறையில் punctuality சில இடங்களிலிருக்கும், பல இடங்களில் இருக்கா. உண்மையான, punctualityஐப் பரம்பரையாகப் பின்பற்றும் கம்பெனிகள் punctualityஐப் பற்றிப் பேசமாட்டார்கள். ஆனால் ஒரே ஓர் இடத்திலும் punctuality தவறாது. அந்தக் கம்பெனி ஆட்கள் தங்கள் சொந்த வாழ்விலும் punctualityஐக் கடைப்பிடிப்பார்கள். தொழிலாளிகள் மனத்தில் எழுந்த punctuality கம்பெனியின் வளரும் ஆன்மா, psychic being. பேசலாம், பின்பற்ற முடியாது. பேசாமல் பின்பற்ற வேண்டும்.

பார்ட்னர் : ஜீவாத்மா உள்ளேயிருப்பதை அறிவது பேசுவது போன்றது. அது வெளிவந்து செயல்படுவது சைத்தியப்புருஷன் போன்றது.

தாயார் : நமக்குள்ள ஜீவாத்மாவை நாம் அறியோம். தபஸ்வி நிஷ்டையில் அறிவார். அறிந்தபின் விழிப்பு வந்தால் மறந்துவிடும், மறைந்துவிடும். நாம் உடல் ஆன்மா, மனம் ஆன்மா, சொல் ஆன்மா, என உணர்ந்து அது வெளிப்படும்படி, சமர்ப்பணத்தால் செயல்படும் பொழுது அரை க்ஷணம் சைத்தியப்புருஷன் வெளிவரும். வெளிவருவது நிலைப்பது சைத்தியப் புருஷன் சித்திப்பது.

பார்ட்னர் : இரண்டுக்கும் உள்ள தூரம் அதிகம்.

கணவர் : எனக்குச் செல்வாக்கு இருப்பதால் நான் போய் மந்திரியை, முதல் மந்திரியைப் பார்ப்பது எனக்குரிய நிலை. அது என் தொகுதிக்குப் பயன்படாது. நான் மேலே போகவேண்டிய பாதை வேறு. M.L.A. ஆகி சட்டசபைக்குப் போவது. அப்படிப் போனால் என் அந்தஸ்து தொகுதிக்குச் சேவை செய்யும். M.L.A.ஆக இருந்து மந்திரியாகவும், முதன் மந்திரியாகவுமாக மாறினால் என் தொகுதிக்கு நான் சேவை செய்யலாம்.



பார்ட்னர் : ஒன்று ஜீவாத்மா, அடுத்தது சைத்தியப்புருஷனா?

தாயார் : ஆம்.

பார்ட்னர் : நமது கம்பெனியில் எது ஜீவாத்மா, எது சைத்தியப்புருஷன்?

தாயார் : இதுவரை நாம் பேசியது எல்லாம் ஜீவாத்மா போன்றது. இதை அனைவரும் பின்பற்றுவது சைத்தியப்புருஷன் ஆகும்.

கணவர் : இந்த ஒரு மாதத்தில் நமக்கு நூறு சந்தர்ப்பங்கள் எழுந்தன. பணமில்லாமல் காரியம் நகராது என்று, ஓர் இடத்திலும் பணத்தைப் பற்றிப் பேச்சே எழவில்லை. இடம் பெரியது என்பதால் எவரும் கேட்கவில்லை.

பார்ட்னர் : இப்பொழுதெல்லாம் டெலிபோன் இன்ஜினீயர் வீட்டில் டெலிபோன் ரிப்பேர் செய்தாலும் மாமூல் நிற்காது. அது இல்லாவிட்டால் வேலை நடக்காது. கேட்கவில்லை என்பது நமக்குள்ள செல்வாக்கால் அன்று. நம்மைவிட அதிகச் செல்வாக்குள்ளவர் எல்லாம் பணம் தருகிறார்கள். அன்னையிருப்பதால் எவரும் கேட்கவில்லை.

பெண் : இது எப்படியம்மா புரியும்?

கணவர் : அதுதான் புத்தி என்பது.

தாயார் : இது புரிந்தால்தான் தொடர்ந்து மேலே போகலாம்.

சிறியவன் : எனக்குத் தோன்றவில்லையே.

கணவர் : எனக்கும் புரியவில்லை.

தாயார் : புரிவது அருள், செய்வது பேரருள்.

ஒரு நாள் கணவரும், பெரியவனும் வந்து தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். சற்று நேரத்தில் பக்கத்துத் தெருவிலிருந்து ஒரு டிபுடி கலெக்டர் வந்தார். அனைவரும் தாயாரைச் சந்திக்க வந்துள்ளனர். அந்த டிபுடி கலெக்டர் பெரியவனுடைய நண்பனின் மாமா.

கணவர் : ஒரு நல்ல காரியம் நம்மால் முடியும் என்றால் செய்வது நல்லதுதானே.

பெரியவன் : அதுவும் கேட்காமல் செய்வது உயர்ந்ததன்றோ?

டி.கலெக்டர் : எப்படி இதை நீங்கள் நம்புகிறீர்கள்?

கணவர் : உங்கள் நண்பருக்குக் குணமானால் நம்புவீர்களா?

டி.கலெக்டர் : குணமானால் உங்களாலாயிற்று என்று எப்படித் தெரியும்?

பெரியவன் : வேறு எப்படிக் குணமாகும்?

டி.கலெக்டர் : இத்தனை நாள் மருந்து சாப்பிட்டதால் இன்று குணமாயிற்று என்று கொள்ளலாமன்றோ?

கணவர் : அதுவும் சரிதான். என் மனைவி பதில் சொல்வாள்.

பெரியவன் : அம்மா எல்லாக் கேள்விகட்கும் பதில் சொல்வார்கள்.

டி.கலெக்டர் : இது முற்றிய கான்சர். குணமாகும் என உங்கள் அம்மா கியாரண்டி கொடுப்பார்களா?



பையன் அம்மாவை அழைக்கப் போனான். அம்மாவுக்கு வரும் சந்தர்ப்பமில்லை. கணவரே மனைவியைக் காண வந்ததால், மனைவி சிரமத்தைப் பாராட்டாது எழுந்துவந்து அனைவருடனும் கலந்துகொண்டார்.

டி.கலெக்டர் : பிரார்த்தனை கான்சரைக் குணப்படுத்தும் என்பது பொருத்தமாகாது.

கணவர் : என் மனைவியை உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள். வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பொதுவான தத்துவ விவாதத்தை எடுத்துக்கொள்ளலாம். இன்று உடம்பு முடியவில்லை.

டி.கலெக்டர் : எனக்கு உத்தரவாதமளிப்பீர்களா?

தாயார் : எதற்கு, ஏன்?

டி.கலெக்டர் : கான்சரைப் பிரார்த்தனை குணம் செய்யும் என்று. அதுவும் உங்கள் பிரார்த்தனையால் என் நண்பர் கான்சர் குணமாயிற்று என்பதை நிரூபிக்கவேண்டும்.

தாயார் : பிரச்சினை என்ன?

பெரியவன் : கான்சர்.

கணவர் : கான்சருக்குப் பிரச்சினையில்லையே.

டி.கலெக்டர் : உங்கள் கணவர் கூறுவது பிரச்சினை.

தாயார் : (கணவரை நோக்கி) என்ன கூறினீர்கள்?

கணவர் : நீ அவருடைய நண்பர் கான்சரைக் குணப்படுத்துவாய் என்றேன்.

தாயார் : (டிபுடி கலெக்டரை நோக்கி) நான் அன்னையைப் பற்றிப் படிப்பேன். நான் படிப்பதை என் கணவரிடம் சொல்வேன். கணவர் நான் பொதுவாகப் பேசியதை இப்படிப் புரிந்துகொண்டிருக்கிறார்.

டி.கலெக்டர் : அப்படியானால் என் நண்பருக்குக் குணமாகாதா?

கணவர் : என் மனைவி அடக்கமாகப் பேசுகிறாள். அவளால் முடியும்.

தாயார் : நோயாளிக்கு அன்னைமீது நம்பிக்கையிருந்தால் அவரே பிரார்த்தனை செய்யலாம்.

டி.கலெக்டர் : அவருக்கு நம்பிக்கையில்லை. உங்கள் பிரார்த்தனையால் பலிக்கவில்லை என நிரூபிப்பதே அவர் நோக்கம்.

தாயார் : என்ன பிரச்சினை, அது யாருடையது?

டி.கலெக்டர் : உங்கள் கணவர் சொல்வதை, 'இல்லை' என நான் நிரூபிக்க விரும்புகிறேன்.

தாயார் : என் கணவர் என்னைப் புரிந்துகொள்ளாமல் பேசியிருக்கிறார்.

டி.கலெக்டர் : கணவரிருக்கட்டும். உங்களால் என் நண்பரைக் குணப்படுத்த முடியுமா?

தாயார் : இந்த கேள்வி ஏன் எழவேண்டும்? எனக்கு அதெல்லாம் முடியாது.

டி.கலெக்டர் : நான் ஜெயித்துவிட்டேன்.

தாயார் : நான் போகலாமா?



கணவர் : ஏன் இப்படிப் பேசுகிறாய்? கலந்து பேசக்கூடாதா?

தாயார் : அன்னை விஷயம் அவரவர் சொந்த நம்பிக்கை. மூன்றாவது பேர்வழியின் விவாதத்திற்குரியதன்று.

15 நாட்கள் கழித்து டிபுடி கலெக்டரும் அவர் நண்பரும் வந்தார்கள். சற்று அடக்கமாக இருந்தார்கள். இந்த 15 நாட்களில் 15 மாதத்திலில்லாத குணம் நோயாளிக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் வந்திருக்கிறார்கள். தாயாரைக் கூப்பிட்டதற்கு, "என்னிடம் கான்சர், அன்னை தவிர வேறு எது பேசவேண்டுமானாலும் வருகிறேன். அவற்றைப் பேச என்னைக் கூப்பிடாதீர்கள்" எனக் கணவரிடம் கூறினார். எப்படி இக்குணம் தெரிகிறது எனக் கணவர் கேட்டார். எதிர்த்துப் பேசும்பொழுது அன்னையையே நினைத்ததால் அக்குணம் தெரிகிறது என்று மனைவி சொல்லியதையும் கணவர் கலெக்டரிடம் சொல்லிவிட்டார். டிபுடி கலெக்டர், மனைவியைப் பார்க்கவேண்டும் என்றும், கான்சரைப் பற்றிப் பேசவில்லை என்றும், அன்னையைப் பற்றி மட்டும் பேசுவேன் என்றார். மனைவி அதுவும் வேண்டாம் என்று கூறிவிட்டார்.

நோயாளி : எனக்கு அன்னை பற்றிச் சொல்வீர்களா? நான் AG's officeஇல் A.O.வாக வேலை செய்கிறேன். எனக்கு குணமானால் AG's officeஇல் உள்ளவர்கள் அன்னை பக்தர்கள் ஆகிவிடுவார்கள்.

மனைவி : அன்னையைப் பற்றி அறிய ஏராளமான நூல்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன.

டி.கலெக்டர் : ஏன் நீங்கள் அன்னையைப் பற்றி எங்களுக்குச் சொல்லக் கூடாது? உங்கள் கணவர் எல்லோரிடமும் பேசுகிறாரே?

மனைவி : நான் அன்னையின் பக்தை. அதைப் பிறரிடம் எப்படிப் பேசுவேன்?

டி.கலெக்டர் : என்ன தவறு?

மனைவி : ஓர் இளைஞனுக்கு ஒரு பெண் மீது தீராக் காதலிருந்தால் அதைப் பிறரிடம் பேசுவானா?

நோயாளி : அன்னை தெய்வமாயிற்றே.

மனைவி : பலருக்குத் தெய்வம். எனக்குச் சொந்தமானவர். நான் பேச முடியாது.

நோயாளி : எனக்கு 15 நாட்களில் நம்பிக்கையில்லாதபொழுது நல்ல குணம் தெரிகிறது.

மனைவி : நீங்கள் சாப்பிட்ட மருந்தாலிருக்கக் கூடாதா? எப்படி அன்னையால் என நினைக்கிறீர்கள்?

டி.கலெக்டர் : இந்த 15 நாட்களும் அன்னையைப் பற்றித்தான் பேச்சு. அதனால் நம்புகிறேன்.

மனைவி : இந்தப் 15 நாட்களில் இருவர் வீட்டிலும் ஏராளமான தவறுகள் நடந்திருக்குமே.

நோயாளி : ஆமாம், ஏன்?

மனைவி : நாம் வேறு விஷயங்கள் பேசுவோம்.

மனைவி எழுந்து போய்விட்டபின் மீதி நால்வரும் தொடர்ந்து விவாதிக்கிறார்கள். அதாவது,

பெரியவன் : அப்பா, அம்மா யாரிடமும் அன்னையைப் பற்றிப் பேசமாட்டார்கள் என உங்களுக்குத் தெரியுமே.

கணவர் : டிபுடி கலெக்டர் நண்பராயிற்றே, அவருக்கு உதவலாம் என நினைத்தேன்.

பெரியவன் : அவர் உதவி கேட்கவில்லையே.



டி.கலெக்டர் : எனக்கு உதவி வேண்டும், விபரம் தெரியவேண்டும்.

நோயாளி : அம்மாவுக்கு அதிக பக்தி. நாம் அன்னையைப் பற்றி எளிதாகப் பேசுவது அவர்கட்குப் பிடிக்கவில்லை.

கணவர் : எங்களுக்கெல்லாம் சொல்வதைப்போல் உங்களுக்கும் சொல்வாள் என எதிர்பார்த்தேன்.

பெரியவன் : நமக்கே அம்மா சுலபமாகச் சொல்வதில்லையே.

நோயாளி : தம்பி, எனக்குக் குணமாக என்ன செய்யலாம்.

பெரியவன் : அம்மா என்ன சொல்வார்கள் என எனக்குத் தெரியும். 3 நாட்கள் இடைவிடாமல் பிரார்த்திக்கச் சொல்வார்.

டி.கலெக்டர் : 3ஆம் நாள் குணமாகுமா?

பெரியவன் : கேள்வி கேட்டால் பதில் வரும், குணம் வாராது.

நோயாளி : கேலி அப்புறம். அதுபோல் குணமாயிருக்கிறதா?

பெரியவன் : குணம் உதாரணத்திற்கில்லை, நம்பிக்கைக்கு.

டி.கலெக்டர் : 3 நாட்களில் குணமாகுமா? 15 நாட்களில் ஏராளமான தவறுகள் ஏற்பட்டன என்று அம்மாவுக்கு எப்படித் தெரியும்?

பெரியவன் : இப்படியெல்லாம் பேசினால் அப்படியெல்லாம் நடக்கும்.

நோயாளி : மதரை மறுத்துப் பேசினால் எப்படிக் குணமாகும்?

பெரியவன் : மதரையே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் அல்லவா?

டி.கலெக்டர் : அந்த நினைவுக்கு இந்த பலன் உண்டா?

அடுத்த 15, 20 நாட்களில் அவர் பூரணமாகக் குணமானார். தாயாரைப் பார்க்க அவரும், டிபுடி கலெக்டரும் பிரியப்படுகிறார்கள். தாயார் ஊரிலில்லை. வந்தபிறகும் அவர்களைச் சந்திக்க விரும்பவில்லை.

இடைப்பட்ட நாட்களில் கான்சர் குணமானதைப் பற்றியே பேச்சு, வேறில்லை.

தாயார் : நீங்கள் எது செய்வதானாலும் அன்னையை அதில் சம்பந்தப்படுத்தவேண்டாம். அதைச் செய்தாலும், என்னைப் பிறருடன் சம்பந்தப்படுத்தாதீர்கள்.

கணவர் : நல்ல காரியமன்றோ!

தாயார் : இது கெட்ட காரியம் என்கிறார் அன்னை.

கணவர் : அவர் ஒரு டிபுடி கலெக்டர். நண்பர் AG's officeஇல் A.O. பெரிய உத்தியோகஸ்தர்களாயிற்றே.

தாயார் : அதெல்லாம் நட்புக்குரியது. பக்தி பவித்திரமானது. நட்பையும் பக்தியையும் இணைக்கலாமா?

கணவர் : நீ சொல்வனவற்றையெல்லாம் நான் அவரிடம் சொல்வேன். அவர் உன்னிடம் பேசப் பிரியப்படுகிறார்.

தாயார் : நான் அதற்குத் தயாரில்லை.

கணவர் : எதிர்த்துப் பேசினால் கான்சர் குணமாகிறது என்றால் வழிபட்டால் எப்படியிருக்கும்!

தாயார் : அப்பலனிருக்காது.

பெரியவன் : ஏம்மா?

தாயார் : வழிபாட்டுக்கு எதிர்ப்புக்குள்ள தீவிரமில்லை.



கணவர் : குணம் சக்திக்கா, தீவிரத்திற்கா?

தாயார் : தீவிரத்திற்கு.

கணவர் : நிறைய தவறுகள் எப்படி நடந்தன?

தாயார் : எதிராகப் பேசுவதால்.

கணவர் : இரண்டும் கலந்திருக்குமா?

தாயார் : கலப்பை நாம் காணாத இடமுண்டோ?

பெரியவன் : அந்தக் கான்சர் பேஷண்டும், நீங்களும் பேசுவதைக் கேட்க எனக்கு ஆசையாக இருக்கிறதம்மா.

கணவர் : வழிபாட்டுக்கு எப்பொழுது தீவிரம் வரும்?

தாயார் : ஆசை போன பிறகு வரும். டிபுடி கலெக்டர் முதலில் வந்ததிலிருந்து எல்லாம் அப்படியே நின்று போய்விட்டதைக் கவனித்தீர்களா?

கணவர் : இனி நான் அவர்களிடம் தொடர்புகொள்ளவில்லை.

பார்ட்னர் வந்தார். முகமும், உடலும் கனிந்துபோய் பழுத்த பழமாக இருந்தார். ஏதோ பெரிய விஷயத்தோடு வந்திருக்கிறார். பேச முடியவில்லை. பேசப் பிரியப்படவில்லை. பெரியவனைப் போகச் சொல்லிவிட்டார்கள்.

பார்ட்னர் : இதுவரை நடந்தது நினைக்க முடியாத பெரியது. நீங்கள் சொன்னபடியெல்லாம் இத்தனை நாட்களாக - கெட்டதை விலக்கி, நல்லதைச் சேர்த்து - மனத்தைப் பக்குவப்படுத்திப் பவித்திரமாக்க முயன்றேன். இந்த உலகத்திலேயே இல்லை நான். உள்ளும் புறமும் தித்தித்தது. இன்று காலை நம் பேங்க் சேர்மன் வந்திருப்பதாகக் கூப்பிட்டு

அனுப்பினார்கள், போனேன். நடந்தது நம்பக்கூடியதாக இல்லை. இப்பவும், பேச நா எழவில்லை. இந்த அதிசயம் நடக்கும் என நான் நினைக்கவில்லை. நாணயம் முக்கியமானது எனக் கண்டேன்.

அவரால் பேசமுடியவில்லை எனக் கண்டு மேலும் அவரிடம் விபரம் கேட்கவில்லை. அவர் தழுதழுத்துப்போய் கொஞ்ச நேரமிருந்து போய்விட்டார். நெடுநாள் எவரும் அதைக் கிளறவில்லை. கணவருக்குத் தாங்கவில்லை என்ற நிலையில் கணவனும் மனைவியும் கலந்தனர்.

கணவர் : நான் போய்ப் பார்ட்னரைக் கேட்டுவிடுகிறேன். இனி எனக்குத் தாங்காது.

மனைவி : தாங்காது என்ற நேரம் கேட்டால், தாங்கமுடியாத பாரம் தலைக்கு வரும்.

கணவர் : என்னால் முடியவில்லை.

மனைவி : முடியவில்லை என்பதால், கூடிவந்தன எல்லாவற்றையும் நாசமாக்கலாமா? மனிதனுடைய பிரச்சினையே அதுதானே. நாமே அதற்குப் பலியாகலாமா?

அந்த நேரம் பார்ட்னரிடமிருந்து போன் வந்து, கணவரிடமிருந்து ஏதோ ஒரு சிறு செய்தி வேண்டுமெனத் தெரிந்தது. கணவர் நேரடியாகப் போய்வரப் பிரியப்பட்டார். மனைவிக்கு இஷ்டமில்லை. இஷ்டப்படாமலிருப்பது தமக்குச் சரியில்லை என்பதால் சமாளித்துக்கொண்டு சந்தோஷமானார். பார்ட்னரும் கணவரும் சந்தித்துப் பேசினர். பார்ட்னரைப் பார்த்தபின் கணவருக்குத் தாம் நினைத்த கேள்வியைக் கேட்கும் தைரியமில்லை. புறப்படும் நேரத்தில் பார்ட்னரே பேசினார்.



பார்ட்னர் : நேரம் வரட்டும்.

கணவர் : நான் குறுக்கே நிற்கமாட்டேன்.

பார்ட்னர் : நாம் மூவரும் பேசவேண்டியது.

கணவர் : நான் படும் அவசரம் என் மனைவிக்குச் சம்மதமில்லை.

பார்ட்னர் : எனக்கு உள்ளே அவசரம் உள்ளவரை பேசக் கூடாதில்லையா? நாணயம் நாட்டை ஆளும், அதற்கும் மதிப்புண்டு என்பது விசேஷம்.

இதன்மூலம் கணவர் விஷயம் எத்தனை பெரியது எனப் புரிந்துகொண்டார். ஓரளவு மனம் அடங்கியது. தாம் பக்குவப்படுவதே சரி என சும்மாயிருந்துவிட்டார். மனம் ஓரளவு அடங்கினாலும் உடல் பதட்டம் குறையவில்லை. வீடு முழுவதும் மாறிவிட்டது. தாயார் மேலும் அமைதியடைந்தார். தமக்கு எந்த ஆழத்தில் அமைதி தேவையோ அங்கில்லை என அவர் அறிவார். அவர் கனவில் அன்னை தோன்றினார். இந்தியா படத்தில் நடுநாயகமாக இருந்த அன்னை சிறு உருவம் பெற்று பாக்டரியிலும் வேறு பல இடங்களில் அன்னை தோன்றினார். க்ஷண நேரம்தான். விழிப்பு வந்தது. உடலெல்லாம் பூரித்தது. சுமார் 20 அல்லது 30 இடங்களில் பாக்டரி பரவப்போவதை தாயார் தெளிவாகப் புரிந்துகொண்டார். அதற்குரிய ஆன்மீகத் தகுதி தாம் பெறவேண்டுமென நினைத்தார். கனவு சூட்சுமம், நம் உலகம் ஸ்தூலம். மகான்கள் சூட்சுமத்தில் கண்டது பலிக்க 100 ஆண்டுகளாகியிருக்கிறது. கனவை எப்படிப் புரிந்துகொள்வது? பார்ட்னருக்கு நண்பராக மேல்மட்டத் தொடர்புகள் உண்டு. அந்த அளவில் அவருடைய மதர் பக்தியை அறிந்த ஒருவர் அவரை அணுகி தம் பாக்டரியில் 2000 தொழிலாளிகள் அடாவடியாக வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும், அது நடந்தால் பல கோடி நஷ்டமாகும் எனவும், அதற்கு ஒரு வழி வேண்டும் எனவும் செய்தி

வந்துள்ளது. தொழிலாளிகட்கு சர்க்கார் ஆதரவிருப்பதால் நியாயத்திற்குக் கட்டுப்படமாட்டேன் என்கின்றனர். பார்ட்னர்மூலம் பலன் பெற விரும்புகின்றனர். அதனால் பார்ட்னர் வர இருக்கிறார் என்று செய்தி வந்தது. பார்ட்னர் வந்தார். அந்த ஆலையில் தொழிலாளிகள் கேட்டதைக் கொடுத்தபின் வாங்க மறுத்து, ஸ்டிரைக் வர இருக்கிறது எனக் கூறினர். தாயார் அதுபோன்ற நிகழ்ச்சி முதலாளியிடமோ, மேனேஜ்மெண்ட்டிடமோ உண்டா எனக் கேட்டு அனுப்பினார். பல உண்டு என பதில் வந்தது. மானேஜ்மெண்ட் சட்டமாக இனி அப்படிச் செய்யக்கூடாது என முடிவு செய்தால் ஸ்டிரைக்கால் நஷ்டம் வாராது என்று தாயார் சொல்லியதை முதலாளி கேட்டு ஆச்சரியப்பட்டு நம்பமுடியாமல் நேரில் பார்க்க விரும்பினார்.

தாயார் : வேலை முடிவதுதான் முக்கியம். என்னைப் பார்ப்பதன்று.

பார்ட்னர் : முதலாளி உங்களைச் சந்திப்பது நல்லது என நினைக்கிறார்.

தாயார் : நான் பார்க்க மறுக்கவில்லை. விசேஷம் பார்ப்பதில் இல்லை. மேனேஜ்மெண்ட் மனம் மாறுவதிலிருக்கிறது. சரி, நான் அவரை 2 நாட்கள் கழித்துச் சந்திக்கின்றேன்.

அவர் வருவதன்முன் தொழிலாளிகள் ஸ்டிரைக் நோட்டீஸை வாபஸ் செய்தனர். அவரால் நம்பமுடியவில்லை. அதன்பின் பொறுக்க முடியாமல் பார்ட்னருடன் தாயாரைப் பார்க்க வந்தார்.

முதலாளி : வேலை முடிந்தபின்னும் என்னால் நம்ப முடியவில்லை.

பார்ட்னர் : முதலாளிக்கு ஸ்டிரைக்கைவிட இதைப் புரிந்துகொள்வது முக்கியம்.

முதலாளி : எனக்கு அன்னை முக்கியம். அம்மா முக்கியம். சற்று விவரம் சொல்லுங்கள்.



தாயார் : உலகம் மனத்திற்குக் கட்டுப்பட்டது. மனம் மாறினால் மக்கள் மாறுவார்கள்.

முதலாளி : நாங்கள் மாறியனவெல்லாம் ஆயிரம், பத்தாயிரம். ஸ்டிரைக் கோடிக்கணக்காகும்.

பார்ட்னர் : முதலாளி உங்களுக்கு ஏதாவது செய்யப் பிரியப்படுகிறார்.

தாயார் : ஆலையில் அன்னை முறைகளைக் கடைப்பிடித்தால் எனக்குச் சந்தோஷம்.

முதலாளி : இல்லை, தனிப்பட்ட முறையில் நான் என்ன செய்யலாம்? என் ஆபீசர்களைச் சந்தித்துப் பேச முடியுமா?

தாயார் : எனக்கு மேடைப் பிரசங்கம் வாராது.

முதலாளி : நான் மீண்டும் வருகிறேன். மறுபடியும் உங்களைப் பார்க்க வேண்டும். நான் உங்கள் கம்பெனிக்கு ஏதாவது உதவ முடியுமா?

பார்ட்னர் : வேண்டுமானால் வந்து கேட்கிறோம். எந்தச் சட்டப்படி இது நடந்தது?

*தொடரும்....*

❀❀❀

**ஜீவிய மணி**

**அடம் பிடிப்பது உடலுக்குரியது (physical).**

**அடம் உடலின் அணிகலன்.**

## மனிதன் ஆசாரம் எனக் கருதுவது ஆண்டவனை விலக்கும்

சுமார் 100 ஆண்டுகட்குமுன் தஞ்சாவூர் ஜில்லாவில் ஓர் ஆசாரமான குடும்பத்தில் சிரார்த்தம் நடந்தபொழுது தோட்டத்தில் தீண்டாதவன் வந்து பசிக்கிறது, சாப்பாடு போடுங்கள் என்றான். வீட்டுக்காரர் ஆசாரத்தில் சிறந்தவரானாலும், உண்மையான பக்திமான். தீண்டாதவனாக வந்தது யார் என அவர் உள்ளூர அறிவார். சாப்பாடு போடச் சொன்னார். அவர் மனைவி சாப்பாடு போட்டார். வந்த விருந்தினர் அனைவரும் எழுந்து சாப்பிடாமல் போய்விட்டனர். அன்று மாலை அவர் கிணற்றில் நீர் மட்டம் தானே ஏறி, வழிய ஆரம்பித்தது. ஆச்சரியம் நடப்பதை ஊரார் வந்து கண்டு வழியும் நீரைப் பிரசாதமாகப் பருகினர். தர்மபுரியில் மழைக்காகப் பிரார்த்தனை செய்தனர். மழை பெய்யவில்லை. 10 நாட்கள் கழித்து 15 மைல் தூரத்திலுள்ள வற்றிய கிணற்றில் நீர் மட்டம் ஏறியது. அது உப்பு நீர். எவரும் பயன்படுத்த முடியாது. அடுத்த, அடுத்த நாட்களில் பல கிணறுகளில் நல்ல தண்ணீர் 10 அடி, 15 அடி ஊறியது.

- ✡ *சங்கரர் சண்டாளனை விலகச் சொல்லியபொழுது, “யாரை விலகச் சொல்கிறாய், சண்டாளனையா, அவனுள் உள்ள பெருமானையா?” என ஆண்டவன் கேட்டார்.*
- ✡ *அதுவே இராமானுஜருக்கும் நடந்தது.*
- ✡ *ஆண்டவன் வேறு, ஆசாரம் என நாம் அனுஷ்டிப்பது வேறு.*
- ✡ *உசிலம்பட்டியில் மழையில்லை, பிரார்த்தனை பலிக்கவில்லை என்று செய்தி வந்தபொழுது, “அன்னையை விட்டு மனதாலும், செயலாலும் விலகிய எவருடனும் தொடர்புகொள்ள மாட்டேன்” என்று உறுதிபூண்டு பிறகு பிரார்த்தனை செய்தால் பலிக்கும் என்று கூறினேன். அப்படியே செய்தனர். மழை பெய்தது.*
- ✡ *மகாபாரதத்தில் சாவித்திரி எமனிடமிருந்து சத்தியவானை மீட்டாள்.*
- ✡ *ஸ்ரீ அரவிந்தத்தில் சாவித்திரியிடம் அவள் உள்ளிருந்து பல்வேறு ஆத்மாக்கள் வந்து, “நானே முழுமுதற் கடவுள். நான் சொல்வதைக் கேள்” என்றனர். “நீ என் ஆத்மா என்பது உண்மை. ஆனால் நீ என் முழு ஆத்மா இல்லை. எனது ஆத்மாவின் பகுதி; அதனால் நீ கூறியதை நான் முடிவாக எடுத்துக்கொள்ள முடியாது” எனப் பல கட்டங்களைச் சாவித்திரி தாண்டி வருகிறாள். எமனைச் சந்திக்கிறாள். நீண்ட வாதம் செய்கிறாள். எமன் கரிய இருளாக இருந்தவன் ஒளிமயமாக மாறிக் கரைகிறான். கரைந்தபின்னும் பழைய பாஷையைப் பேசுகிறான். சாவித்திரி எமனை அழித்து சத்தியவானை மீட்கிறாள்.*
- ✡ *ஸ்ரீ அரவிந்தம் ஆண்டவனின் சக்தி. வற்றிய கிணற்றில் ஏராளமாக நீர் ஊறும் சக்தி. பட்ட மரம் துளிர்க்கும் சக்தி.*
- ✡ *நம் வாழ்வில் அச்சக்தி செயல்பட மனம் சத்தியத்தை முழுமையாக ஏற்று, முழுமையாகப் பின்பற்ற வேண்டும். அன்னையை விட்டு செயலாலும், மனதாலும் விலகிய எவருடனும் தொடர்புகொள்ளக் கூடாது.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூக மாறுதல், மனநிலை மாறுதல், ஜீவியம் மாறுதல் ஆகியவற்றை மேல்மனம் ஏற்றுக்கொள்ள விரும்பினால் உடனே ஏற்றுக்கொள்ளும். ஆழ்ந்த மனம் அதுபோல் எளிதில் ஏற்றுக்கொள்ளாது.

***மேல்மனம் ஏற்பதை ஆழ்மனம் மறுக்கும்.***

லைப் டிவைன்

கர்மயோகி

## XII. Delight of Existence : The Solution

We are examining the problem of creation of evil. Now we have formed an idea of existence. This idea is that there is an underlying delight of existence. It cannot be removed. We do have sensations. They are outward and are on the surface. They are positive, negative or neutral. They are waves of that infinite depth of being. Sometimes they are the foam on the waves. From this view, we can arrive at a true solution for the problem of evil. The self of things is infinite. It is an indivisible existence. That existence has an essential nature or power. That is an imperishable force. It is infinite and is the power of self-conscious being. That self-consciousness too has a nature. It can be called nature or knowledge. It is a knowledge of itself. It is a delight of being. Again that delight is infinite and cannot be removed. In this world we know of forms. Also there is formlessness. There is an awareness of infinite. That awareness is eternal. It is also an indivisible being. There are many appearances. They are appearances of finite division. This self-existence is there in all of these. It preserves its self-delight in all these. It is a perpetual experience of this self-existence. Matter is inconscient. It is only an appearance. It is the soul that is inconscient in Matter. Matter is in bondage to its own habit. It is a superficial habit. It is only a particular mode of self-conscious existence. Our soul discovers in Matter the Conscious-Force constant, immobile, brooding. Matter has no sensation. The soul which discovered the infinite being in the inconscience, discovers the same infinite being in its non-sensation. The soul attunes itself to that discovery. It discovers an infinite conscious Delight, imperturbable, ecstatic, all-embracing. **This delight is its own delight; this self is its own self in all**. Our view is the ordinary view of the self. It is from our surface. We are awake only on the surface. We move only there. This self is hidden from our view. It is there profound, subconscious. This self is within all forms. It is within all experiences, pleasant or painful or neutral. In spite of the soul being hidden, it acts profoundly from the subconscious. It is that which enables and compels things to remain in existence. For men and things cling to existence because of this self. Its will is overmastering. What we see as instinct is the vital perception of the self. The vital tries to preserve itself. Matter is imperishable. That is the expression of the self physically. The sense of immortality the mind has is from this self. It is there in all phases of self-development of the formed existence. We know of the occasional impulse to destroy oneself. It is only a reverse form of this will to be. When attracted to other states, the self tries to withdraw from the present body. Delight is existence. Delight is the secret creation. Delight is the root of birth. Delight is the cause of remaining in existence. Delight is the end of birth. Creation ceases into delight. The Upanishad says, "From Ananda all existences are born, by Ananda they remain in being and increase, to Ananda they depart."

There is an age-long controversy in the old philosophies. Each school has a different formula. These three aspects of essential being are one in reality. Looking at them from this perspective, it is possible for us to unite the differing formulas. These three aspects are in our mental view triune. They are separable only in appearance. Phenomena divide the consciousness or appear to divide. In reality, there is no division. We can look at world-existence only in appearances. Then it is Maya as we are seeing them only in relation to pure Existence. That pure Existence is infinite, immutable and indivisible. This is not the original meaning of Maya. It has another original sense. It means it is a comprehending consciousness. It also contains. It is capable of embracing, measuring and limiting. This means Maya is a formative consciousness. It outlines, measures out, moulds, forms. It makes us know the unknowable. It helps us measure the limitless. Its original sense is knowledge, skill, intelligence. It has come to acquire a different meaning. Now it is understood as cunning, fraud or illusion. The philosophical systems use a figure of this corrupted meaning. The world now takes Maya for illusion or enchantment.

The world is Maya. The world is not unreal in the sense that it has no sort of existence. We may say it is a dream of the Self. Still, the world

would exist in the Self as a dream. The world would be real to Self in the present, even while it is ultimately real. We do not have to say that the world is unreal in the sense that it has no kind of eternal existence. Particular worlds may dissolve. Particular forms may dissolve. They may dissolve physically. They may return from the consciousness of manifestation into the non-manifestation. Yet Form in itself is eternal. The world in itself is eternal. From non-manifestation they return inevitably into manifestation. They have an eternal recurrence, if not eternal persistence. They have an eternal immutability in sum and foundation. They also have an eternal mutability in aspect and in appearance. Was there ever a period in Time when there was no form of universe? We are not sure. Can we say there was no play of being represented to itself in the eternal Conscious-Being. Can we say there was only an intuitive perception that the world we know can and does appear from That and return to It perpetually? We cannot say that.

Still, the world is Maya because it is not the essential Truth of infinite existence. The World is only a creation of self-conscious being. It is not a creation in the void. It is not a creation in nothing out of nothing. But, the world is a creation in the eternal Truth and out of the eternal Truth of that Self-being. Its continent, origin, and substance are the essential, real Existence. Its forms are changeable forms of That to its own conscious perception. It is determined by its own conscious force. It is a creative force. They are capable of manifestation. They are capable of non-manifestation. The mental sense is subject to error and incapacity. Illusions arise out of that. We cannot attribute our incapacity to God or the infinite consciousness. If we do so, it will be audacious. Thus, we may call this the illusion of infinite consciousness. The infinite consciousness is beyond Mind and greater than the Mind. Therefore, it is beyond such illusions. These illusions are falsehoods. The essence and substance of Existence is not a lie. All the errors and deformations come from our ego, as ego is of divided consciousness. Therefore, we can only say the world is not essential truth of That. The consciousness is free. It multiplies. It is mutable but superficial. Even this is infinite. Therefore we can say the world is a phenomenal truth. It is not of the fundamental and immutable Unity. Our consciousness is divided. The infinite consciousness is indivisible.



Let us look at world-existence in relation to consciousness only. We can extend our look to force of consciousness also. We see then the world is a movement of Force. That Force, we see, obeys some secret will. Consciousness that possesses the world has a will of its own. This will or necessity seems to move the world. We find the world obeys that necessity. If so, then the world is a play of Prakriti, the executive Force. It plays to satisfy Purusha. Purusha is a Being. It is a conscious Being. Purusha enjoys and regards. Or, it is the play of Purusha reflected in the movements of Force. And Purusha identifies with such movements. The world, then, is the play of the Mother of things. She moves to cast Herself forever into infinite forms. She is avid of eternally outpouring experiences.

We can look at World-Existence in its relation to self-delight. It is the self-delight of eternally existing being. This experience is described as Lila. It can even be realised as Lila. Lila is the play, it is the child's joy, the poet's joy, the actor's joy, the mechanician's joy. It is the joy of the Soul of things eternally young. It is perpetual and inexhaustible. It creates and re-creates Himself in Himself. It does so for the sheer bliss of self-creation, self-representation. We realise Himself as the play, the player and the playground. These are the three generalisations of the play of existence. It is their relation to the eternal and stable. The immutable Sachchidananda is that existence. They are from the three conceptions Maya, Prakriti, and Lila. In Indian philosophic systems, they are mutually contradictory. In fact, they are perfectly consistent with each other. Each is complementary to the other. All of them are necessary in their totality to an integral view of life. We are part of this world. In its most obvious view it is a movement of Force. We can penetrate that Force. On the surface there is an appearance. Behind this we find consciousness. What we see is a mutable rhythm of consciousness. The consciousness casts up, projects in itself phenomenal truths of its own infinite eternal being. This rhythm in its essence, cause and purpose is a play of infinite delight of being. It is ever busy with its own innumerable self-representations. This is a triple or triune view. This must be the starting point for all our understanding of the universe.

We now see the root of the whole matter. The eternal immutable delight of being moves out into infinite and variable delight of becoming. We have to conceive one indivisible conscious Being behind all our

experiences supporting them. It supports them by its inalienable delight. It effects the variations of pleasure and pain and neutral indifference by its movements. The three responses constitute our sensational existence. **That is our real self.** The mental being is subject to the triple vibration. It can only be a representation of the real self. The real self is put in front for the purposes of sensational experience. The sensational experience is the first rhythm of our divided consciousness. The universe contacts us at multiple points. The sensational experience is the response and reaction to such a touch. It is an imperfect response. It is a tangled and discordant rhythm. It is a prelude to receiving the full play. It is a preparation to appreciating the full, unified play of the conscious Being in us. It is not the true and perfect symphony we could have. If we can enter into sympathy with the One in all variations, we can have this symphony. We can attune ourselves to the absolute and universal diapason.

If this view is right, certain consequences naturally issue out of it. In our depths we are that One. In the reality of our being we are the indivisible, All-Consciousness. It is also inalienable All-Bliss. There is a limited part of ourselves. It is uppermost in our waking consciousness. The three vibrations of pain, pleasure and neutral experience are only the surface arrangements. It is superficial because it is sensational experience. Behind there must be something in us. It is much vaster, profounder, and truer than the superficial consciousness. It takes delight impartially in all experiences. Becoming is an agitated movement. The mental being labours, suffers but perseveres. Supported by that secret delight, the mental being is able to pass through all its ordeals. That which we call ourselves is only a trembling ray on the surface. Behind is all the vast subconscient and the vast superconscient. Both profit by all the surface experiences. They both impose themselves on the external self. The external self is exposed as a sort of sensitive covering to the contacts of the world. It is veiled. It assimilates all these contacts into its values. They are values of a truer, profounder, mastering creative experience. Out of its depths, it returns them to the surface. They come as strength, character, knowledge, and impulsion. To us their roots are mysterious. Our mind moves and quivers on the surface. Our mind has not learned to concentrate itself and live in the depths.



In our ordinary life, truth is hidden from us. We dimly glimpse the truth at times. Our conception of the truth is imperfect. We can learn to live within. We surely awaken to this presence within us. It is our more real self. It is a profound presence. It is calm, joyous and powerful. The world is not its master. It is a presence which is the radiation of the Lord within. It may not be the Lord Himself. We are aware of it within. It supports and helps the superficial self. It is smiling at the pleasures or pains as at the error and passion of a little child. We can go back into ourselves and identify ourselves with that Divine. Really it is a radiant penumbra of the Divine. It is not our superficial experience. Then, we can live in that attitude towards the contacts of the world. We can stand back in our entire consciousness from the pleasures and pains of the body. We can also stand back from our vital being and mind. In that case, we can possess them as experiences. As their nature is superficial, it does not touch our real being. It does not impose itself on the core of our being. The Sanskrit term is entirely expressive. It is *anandamaya* behind *manomaya*. It is a vast Bliss-Self behind the limited mental self. The mental self is only a shadowy image and disturbed reflection of the former. **The truth of ourselves lies within and not on the surface**.

Our triple vibration of pleasure, pain and indifference is superficial. It is an arrangement and result of our imperfect evolution. It can have no absoluteness, no necessity. We respond to contact with pain or pleasure. This is only a habit. There is no obligation to return a particular response of pleasure or pain. We feel pleasure in a particular contact. We feel pain in another contact. This is a habit our nature has formed. It is a constant relation the recipient has established. We can respond in the very opposite way. It is within our capacity. We can respond with pleasure where it used to be pain. We can also feel pain where we used to feel pleasure. The vast Bliss-Self is within us. Its constant experience is inalienable delight. We can train our superficial being to freely respond with that delight. We are not compelled to respond with pain or pleasure or indifference as of now. And this is a greater conquest. This is greater than the glad and detached reception in the depths of the habitual reactions on the surface. It is a complete self-possession of delight. It is no longer a mere acceptance without subjection. It is not a free acquiescence in imperfect values of experience. It enables us to convert the imperfect into the perfect, false into true values. The mental being

experiences the dualities. The Spirit feels constantly the veritable delight of the depths.

It is not difficult to perceive this pure habitual relativity of reactions of pleasure and pain. The nervous being in us is accustomed to certain fixedness. It is used to a false impression of absoluteness in things. To it, victory, success, honour, and good fortune of all kinds are pleasant things in themselves. They must produce joy just as sugar must taste sweet. Defeat, failure, disappointment, disgrace and evil fortune are unpleasant things in themselves. They must produce grief, just as wormwood must taste bitter. To vary these responses is a departure from fact; it is abnormal and morbid. The nervous being is a thing enslaved to habit. It is a means devised by Nature for fixing constancy in Nature. Sameness of experience, the settled scheme of man's relation to life are secured by this.

The mental being is free. It is the means Nature has devised for flexibility and variation. This is needed for progress and variation. The mental being is its own master. Unless it chooses to subject itself, it is free. It does allow itself to be dominated by the nervous system. Mind is not bound to be grieved by defeat, disgrace or loss. It can meet these things with perfect indifference. Mind can meet defeat and disgrace by an attitude of gladness. The more man refuses to be dominated by his nervous system, the greater is his freedom. His freedom increases in proportion to his drawing back from his nerves and body. Thus he becomes the master of his own responses to this world's contacts. He is no longer a slave to the external touches.

In regard to physical pain and pleasure, it is more difficult to apply the universal truth. It is so because this is the very domain of the nerves and the body. The external pressure and the external contact come to us through the nerves and body. Even here, we glimpse the truth. Here is a fact. The same physical contact that gives pain can give pleasure in other circumstances to the same individual. When conditions change, pain becomes pleasure. This can happen even when the stage of development one is in changes. There is the fact that certain acts inflict severe torture or suffering. Men in periods of high excitement remain unconscious of the same pain. Under high excitement men are



indifferent to pain which will ordinarily be torture. In many cases, the nerves are able to reassert themselves and remind the mentality of its habitual obligation to suffer. At such times, the suffering returns. But this is not inevitable, it is only habitual. In hypnosis, we see the person under hypnosis is prevented from feeling the pain of a wound or puncture. He does not feel the pain in the abnormal state. The hypnotist can also prevent him from allowing the pain to return when he is awakened. The reason for this phenomenon is perfectly simple. The habitual waking consciousness is the slave of nervous habits. The hypnotist is able to suspend it and appeal to the subliminal mental being in the depths. It is the inner being who is the master of the nerves and the body, if he chooses to will. This freedom from pain comes from another person. It comes through the process of hypnosis in an abnormal fashion. It is not a true possession. It comes rapidly and goes quickly. This freedom can be won by one's own will, gradually, with true possession. That can effect a victory of the mental being over the nerves and the body. It can be won partially, or even completely.

Pain of mind and body is a device of Nature. Nature is the Force in her works. It is meant to subserve a definite transitional end in her upward evolution. To the individual, the world is a play and complex shock of many forces. The individual stands in the midst of this play. He is a limited constructed being. He has a limited amount of force. It is exposed to numberless shocks. They wound, maim, break up or disintegrate his construction. Pain is in the nature of a nervous physical recoil from a dangerous contact. He recoils even from a harmful contact. The Upanishads call it *jugupsa*. It is the impulse of self-defence from 'others'. It is the shrinking of the limited being from that which is not himself. What is not sympathetic or in harmony with itself is the 'other'. It is from this point of view an indication by Nature of that which has to be avoided, that which has to be remedied. Maybe it can be successfully avoided. It does not come into being in the purely physical world so long as life does not come into being. Till then, mechanical methods are sufficient. It begins when life enters the scene. Life is frail and imperfect to possess Matter. It grows with the growth of Mind in life. It continues so long as Mind is bound in the life and body. Mind uses life and body. Mind depends upon life and body for its knowledge and even means of action. Mind is subjected to the limitation of body and life. These limitations give rise to egoistic impulses and aims. Mind

is bound by them. Mind can become free, unegoistic. It can work in harmony with all other beings. It can function in harmony with the play of the universal forces. Then suffering has less of a role. The use of suffering diminishes. Suffering can disappear. It can only continue as a past habit of Nature. There is no longer any use for suffering. But the habit remains. The higher organisation is imperfect. Therefore the lower organisation persists in the higher. Eventually it should be eliminated. It is an essential point in the destined conquest of the soul over Matter. The soul thus conquers the egoistic limitations of Mind.

This elimination is possible because pain and pleasure are currents of the delight of existence. One is imperfect and the other is perverse. As the being is self-divided in its consciousness, this imperfection and perversion come into being. Self-division is because Maya measures and limits. The individual has all the universe to receive. But the ego makes the reception piecemeal. The sensation of the universal soul is the *rasa* of Sanskrit. All things and all contacts carry rasa. The sap and essence of things and its taste are the rasa. In Sanskrit it is an aesthetic term. We do not seek the essence of the thing in its contact with us. We look only to the manner in which it affects our desires and fears. We are concerned about how our cravings and shrinking are affected. This leads us to the blank inability to seize the essence. Therefore Rasa takes the other forms of grief and pain. It also takes the forms of imperfect and temporary pleasures or even indifference. We could be entirely disinterested in mind and heart. It can impose a detachment on the nervous being. These imperfect and perverse forms of Rasa will be progressively eliminated. Then the true essential taste of the inalienable delight of existence in all its variations would be within our reach. In Art and Poetry we have a little of these experiences. The variable universal delight is aesthetically received by us. There the taste of the sorrowful, the terrible, even the horrible or repellant reveals to us. As we are detached and disinterested, we think only of the thing and its essence. We do not think of ourselves or our self-defence (*jugupsa*). This aesthetic reception of contacts is not a precise image of pure delight. Pure delight is supramental and supra-aesthetic. It is not even reflected by the aesthetic sense. Here sorrow, terror, and horror remain. In supramental delight, they are not admitted. Aesthetic sense represents partially and imperfectly one stage of the progressive delight. This belongs to the universal soul in things in manifestation. It admits us in part of our



nature to that detachment. It is a detachment from the egoistic sensation. We then acquire that universal attitude through which one Soul sees harmony and beauty. Whereas we divided beings see here chaos and discord. The full liberation can come to us only by a similar liberation in all parts. It is universal aesthesis, the universal standpoint of knowledge, the universal detachment from all things. Yet in our nervous and emotional being, we can sympathise with all things.

The nature of suffering is a failure of consciousness in us to meet the shocks of existence. Therefore, it shrinks and contracts. The self-limitation of egoism creates an inequality in that receptive and possessing force. The ego is ignorant of the true Self which is Sachchidananda. *Jugupsa*, the shrinking and contraction must be replaced by *titiksha*, the facing, enduring and conquest of all shocks of existence. By this enduring and conquest, we proceed to an equality. This equality may be indifference to all contacts or gladness in all contacts. This equality must find a firm foundation in replacing ego by Sachchidananda which is All-Bliss. Ego enjoys and suffers while it is All Bliss. The Sachchidananda may be transcendent of the universe. It may be aloof from it. To this state of distant Bliss is the path of equal indifference. It is the path of the ascetic. The fact is, the Sachchidananda consciousness can be transcendent as well as universal. We can reach this state by the path of surrender and loss of ego in the universal. It helps us possess an all-pervading equal delight. It is the path of the ancient Vedic sages. The touch of pleasure is imperfect. The touch of pain is perverse. To be neutral to those is the first step in the soul's self-discipline. Conversion to equal delight can come later. The direct transformation of the triple vibration of pain, etc., into Ananda is possible, but less easy to the human being.

Such, then, is the view of the universe which arises out of the integral Vedantic affirmation. The infinite, indivisible existence is all blissful. It is pure in its self-consciousness. It moves out of its fundamental purity into the varied play of Force that is consciousness. It is the movement of Prakriti which is the play of Maya. The course and movement of the world passes through several stages. The first stage is in the

physical universe. Next it emerges in sensation. The triple vibration of pain, pleasure and indifference arises in the next stage of mind and ego. The final stage is the full emergence of Sachchidananda in the universe. At the physical stage, the delight of existence is self-gathered, absorbed and subconscious in the physical universe. Next it emerges in the great mass of neutral movement. We cannot yet call it sensation. The triple vibrations originate from the limitation of the force of consciousness. It is a limitation of the form. Its conflict with the universal Force creates disharmony. Only in universality does Sachchidananda emerge fully and conquer Nature.

The question arises — why should the One take delight in such a movement? The answer is short. In the Infinity of the One, all possibilities exist. **The delight of existence lies in the variable realisation of its possibilities.** This is there in the mutable becoming as well as in the immutable being. We refer to the variations in the mutable becoming. We are part of a universe in which Sachchidananda is concealed in its opposite. It tries to find itself even in the terms of its opposite. Infinite being loses itself in the appearance of non-being. It emerges in the appearance of a finite Soul. Infinite consciousness loses itself in inconscience. It takes on the appearance of vast indeterminate inconscience. It emerges in the appearance of limited consciousness that is superficial. Force is infinite and self-sustaining. It loses itself in chaos of atoms. It emerges in the insecure balance of a world. Infinite Delight loses itself in chaos of Matter. It emerges as varied pain. It is the discordant rhythm of pleasure, indifference, etc. Infinite Unity loses itself in the appearance of chaos of multiplicity. It emerges in a discord of forces and beings. They seek to recover unity by possessing, dissolving and devouring each other. In this creation, the real Sachchidananda has to emerge. Man, the individual, has to become and to live as a universal being. His mental consciousness is limited. It has to widen to the superconscient unity which embraces all. His narrow heart has to learn to embrace all. Its lusts must be replaced by universal love. His restricted vital being must be equal to the universal shocks. It must grow capable of universal delight. His physical being must know it is no separate entity. It must discover itself one with all the other bodies. The



One is the supreme Existence-Consciousness-Bliss. It is oneness-in-all, it is of unity and harmony. His whole nature has to reproduce that Unity and harmony in itself.

All this is play. The secret reality here is always one and the same delight of existence. Before the emergence of the individual, the same delight was in the subconscious sleep. In all the struggles, varieties, vicissitudes, perversions, conversions, and reversions we find this delight. The individual must wake up in the eternal superconscient self-possession. He must become one with the indivisible Sachchidananda. This is the play of the One, the Lord, the All. It is revealed to our liberated and enlightened knowledge. Just now we are involved in the conceptive standpoint of this material Universe.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் முன்னேற, தானுள்ள நிலையில் தன் அனுபவத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். அதாவது அந்நிலைக்குரிய அறிவு, நுகர்வு, பலனிருக்க வேண்டும். தானுள்ள நிலையில் பூர்த்தியாகாத மனிதன் முன்னேற முடியாது. ஏதாவது ஒரு பலத்தால் முன்னேறுவதுண்டு. முன்நிலையில் ஓர் அம்சம் குறைவாக இருக்கும்வரை, புது நிலையில் வேலை பூர்த்தியாகாது.

ஆசையைப் பூர்த்தி செய்ய விழைபவன், அதைப் பூர்த்தி செய்யாமல் மேலே போக முடியாது. அனுபவிப்பது அவசியம். ஆனால், அது முறையானதாக மட்டும் இருக்க வேண்டும்.

***ஆசை பூர்த்தியாகாமல் அடுத்த நிலையில்லை.***

## அன்பர் கடிதம்

**அன்னையின் மலர்பாதங்களுக்குச் சமர்ப்பணம்!**

ஆன்மீக அன்னையை எங்கள் குடும்பம் உணர ஆரம்பித்து இரு வருடங்களாகின்றன. அன்றிலிருந்து இன்றுவரை எங்கள் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் அன்னையின் ஆணைப்படிதான் நடக்கிறது.

சிறு வயதிலிருந்து குடலிறக்கம் என்ற வியாதியால் என் கணவர் அவதிப்பட்டு வந்துள்ளது அன்னையை அறிய ஆரம்பித்ததும்தான் எனக்குத் தெரிய வந்தது. ஒவ்வொரு மாதமும் தவறாமல் பாண்டிச்சேரி அன்னையை தரிசிக்கும் பழக்கம் உடையவர்கள் நாங்கள். அக்டோபர் 19ஆம் தேதி வழக்கம்போல் பாண்டி சென்று வீட்டிற்கு திரும்பி, காரை ஷெட்டில் விட்டுவிட்டு உறங்கச் சென்ற நாங்கள், காலை எழுந்து பார்த்தபோது காரின் முன்பக்க டயர் ஒன்று முழுவதும் பங்ச்சராகி, வெடித்த நிலையில், கார் அமுங்கிய நிலையில் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டோம். எந்த இடையூறும் வழியில் ஏற்படாமல் காத்து, பத்திரமாக எங்களை வீட்டில் சேர்த்த நிலையில் இவ்வாறு ஏற்பட்டதையறிந்து, அன்னைக்கு நன்றி செலுத்தினோம்.

மேலும் அக்டோபர் 29ஆம் தேதியன்று CMC மருத்துவமனைக்குச் சென்று டாக்டரைப் பார்த்தபோது என் கணவருக்கு இரு பக்கமும் குடலிறக்கம் (indirect hernia) ஏற்பட்டுள்ளது எனவும், உடனடியாக ஆபரேஷன் செய்தாகவேண்டும் எனவும் மருத்துவர் கூறிவிட்டார். காரை இவர் மீண்டும் கொஞ்ச நாட்களுக்கு எடுக்கக்கூடாது, ஓய்வு வேண்டும் என்பதால், அன்னை நடத்திய நாடகம்தான் கார் டயர் வெடித்தது என்பதைப் புரிந்து கொண்டோம். இதுமட்டுமின்றி இதற்கு மேல்தான் நாங்கள் வைத்த ஒவ்வோர் அடியிலும் அன்னையின் கருணையும், வழிநடத்துதலும் ஆரம்பித்தது.

உறவினர் யாரும் பக்கத்துணையில்லாத நேரத்தில் அன்னையின் அருள் ஆணையால் நாங்கள் சென்ற பக்கம் எல்லாம் நேசக்கரமும், துணைக்கரமும் நீட்டி நண்பர்கள் உதவி செய்ய



ஆரம்பித்தனர். மிகப்பெரிய மருத்துவமனையாகிய வேலூர் சி.எம்.சி.யில் முதலில் என் கணவரைப் பரிசோதித்த மருத்துவர் பெயர் Dr. அரவிந்த தேவ். பரிசோதித்த டாக்டரின் பெயர் அரவிந்தர் என்பதே எங்களுக்கு பகவான் ஸ்ரீ அரவிந்தரையே அன்னை அனுப்பியது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. பிறகு ஆப்பரேஷன் தியேட்டரில் வேலை செய்யும் ஒரு நண்பர் வந்து தாமாகவே உதவி செய்ய ஆரம்பித்தார். அம்மருத்துவமனையில் வேலை செய்யும் மற்றொரு சிநேகிதி எங்கள் கூடவே அந்த ஒரு வாரமும் இருந்து உதவி புரிய ஆரம்பித்தார். என் கூடப்பிறந்த தங்கையின் கணவர், நண்பருக்கு நண்பராய், உறவினராய் இருந்து உதவி புரிந்தார். என் குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு, அவர்களைப் பற்றிய என் மனக் கவலையை என் தங்கையும், அவள் கணவரும் அகற்றினர். இன்னும் பலப் பல நண்பர்கள் உதவிக்கரம் நீட்டினர்.

மருத்துவமனையில் அவரை அட்மிட் செய்யச் சென்றபோது முதலில் படுக்கையில் அன்னையின் அருட்பிரசாத பாக்கெட்டையும், அலமாரியில் ஸ்ரீ அரவிந்தர், அன்னை படத்தையும் வைத்து மலர் தூவி (வாடாமல்லி, சாமந்தி மலர்கள்) வணங்கிய பிறகே அவரைப் படுக்கச் சொன்னேன். பொதுவாக அம்மருத்துவமனையில் இவ்வாறு செயல்படுவது என்பது இயலாத ஒன்று. ஜெனரல் வார்டு என எழுதிக் கொடுத்த எங்களுக்கு படுக்கை இல்லாததால் தனியார் வார்டில் அட்மிட் செய்தனர். ஆப்பரேஷன் தியேட்டரில் ஆப்பரேஷனுக்கான நேரமில்லை என மறுத்த டாக்டர்கள், திடீரென்று வெள்ளியன்று (7.11.03) முதல் பேஷண்ட்டாக இவருக்கு அறுவை சிகிச்சை செய்ய ஒப்புக்கொண்டனர். ஸ்ரெச்சரில் அவரைக் கொண்டுசென்றபோதும் அன்னையின் அருட்பிரசாதப் பாக்கெட் வைத்தே அனுப்பினேன். ஆப்பரேஷன் முடிந்ததும் படுக்கையை மாற்றிவிடுவார்கள். ஆனால் இவருக்கோ மீண்டும் அதே படுக்கையில் கொண்டுவந்து சேர்த்தனர். அன்னையின் பிள்ளையாகிய இவர் கஷ்டப்படக்கூடாது என்பதற்காக அதே பிரைவேட் படுக்கையில் கொண்டுவந்து சேர்த்தது, அம்மருத்துவமனையில் வேலை செய்பவர்களையே ஆச்சரியப்பட வைத்தது.

பிறகு அவர் உடல்நலம் தேறி டிஸ்சார்ஜ் ஆகி வீடு வந்து சேர்ந்ததும், நானும், என் பெண்ணும் அன்னைக்கான 12 மணி நேர

பிரார்த்தனையை விடாமல் அன்னையிடம் செலுத்தினோம். ஒரு நாள் அவரை வீட்டில் தனியாக விட்டுவிட்டு அவருக்காக மருந்துகள் வாங்க நான் வெளியே செல்ல வேண்டிய கட்டாயம். குழந்தைகளும் பள்ளி சென்றுவிட்டனர். அன்னையே நான் வரும்வரை நீதான் துணை என்று கூறி பிரார்த்தனை செய்துவிட்டு சென்றுவிட்டேன். நான் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு இவர் அன்னையின் அருகாமையை உணர்ந்திருக்கிறார். சிவப்பு நிற ஜரிகைப் புடவையில் அன்னையின் அருட்பாதங்கள் இவர் கட்டிலருகே தெரிய, அவர் படுத்திருந்த அறை முழுவதும் சிவப்பு நிறமாக மாறிவிட்டிருக்கிறது. இவர், 'அம்மா, அம்மா' என அழைத்தவாறு தூங்கிவிட்டிருக்கிறார். நான் மருந்து வாங்கச் சென்ற நேரம் இவர் தனியாக இருக்கிறாரே என நினைத்த அதே நேரம் இந்நிகழ்ச்சி நடந்துள்ளது.

தற்போது, இவர் உடல்நலம் தேறி, வேலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ளார். முற்றிலும் உடல்நலம் தேறியவுடன், பழையபடி எங்கள் காரில் பாண்டிச்சேரிக்குச் சென்று அன்னையை பிரார்த்திக்க வேண்டும். இதுவே எங்கள் தற்போதைய பிரார்த்தனை.

அன்னையை அறிந்தவர்களை அவர் கைவிடுவதில்லை என்பதற்கு என் கணவர் நோய் கொடுமையிலிருந்து விடுபட்டதே சாட்சி. அன்னையுடனான எங்கள் அனுபவங்களை அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று இக்கட்டுரையை அன்னையின் அருட்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பெண்ணின் இனிமையும், பெருமையும் யோகத்தை வாழ்வாகவும், வாழ்வை யோகமாகவும் மாற்றவல்லது.

***வாழ்வு யோகமாவது பெண்ணின் பெருமை.***

***யோகம் வாழ்க்கையாவது பெண்ணின் இனிமை.***





## பிரம்மம், புருஷா, ஈஸ்வரா — மாயா, பிரகிருதி, சக்தி

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

*(இராணிப்பேட்டை தியான மையத்தில் 15.8.2003 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மி நாராயணன் நிகழ்த்திய உரை)*

- **சச்சிதானந்தமாக பிரம்மத்தைக் கண்ட ரிஷிகள் அதை மூன்று பகுதிகளாகக் கண்டனர். ஆறு பகுதிகளாகக் கண்டவரும் உண்டு. அந்தப் பகுதிகள் பிரம்மம், புருஷன், ஈஸ்வரன், மாயை, பிரகிருதி, லீலை ஆகும். எவராலும் ஒரு பகுதியை மட்டும் காணமுடிகிறது. கண்டது உண்மை; காணாதது பொய் என்றனர். கண்டது உண்மை, என்றதோடு நிறுத்தவில்லை. தாம் காணாதது, பிறர் கண்டது பொய் என்றனர். ஸ்ரீ அரவிந்தர் பிரம்மத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்தாலும், ஆறாகப் பிரித்தாலும் பிரம்மம் முழுமை; மற்ற பகுதிகள் அனைத்தும் உண்மை; எதுவும் பொய் இல்லை. ஆனால் பகுதி பகுதியே, முழுமை இல்லை எனக் கூறுகிறார். இது விளங்குவதற்கு நாம் சர்வம் பிரம்மம் என்பதை உண்மையாகக் கொண்டு நம் ஆத்மாவே பிரம்மம் என்று கொள்ளவேண்டும்.**

- **ஜீவாத்மாவே பிரம்மம் என்றால் மாயை பிரம்மத்தின் சக்தியாகிறது. அது ஆத்மசக்தி; இதை முதலில் மௌனமாகவும் பிறகு சிருஷ்டியாகவும் காண்கிறோம். மௌனமும் சிருஷ்டியும் மாயையின் பகுதிகள். இதேபோல் புருஷனையும் ஈஸ்வரனையும் புரிந்துகொண்டால் மனம் எழுப்பும் முரண்பாடு இல்லை.**

- **பையன் திருமணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் வைத்தவுடன் பெற்றோரை மறந்துவிடுகிறான். வீட்டிலிருந்து**

**கிளப்பிற்குப் போய் சீட்டாட ஆரம்பித்தால் வீடு மறந்துவிடுகிறது. மறந்தவனுக்கு மண்டையில் அடி விழும்வரை மயக்கம் தீராது. சீட்டாட்டத்தில் மற்றவர்கள் தன்னை ஏமாற்றியவுடன் ஏன் எனக்கு இந்த நிலை என்ற கேள்வி எழுந்து வீட்டிற்கு வருகிறான். மனைவி, அவனைக் கேவலமாகப் பேசியபோதுதான் பெற்றோர் நினைவு வருகிறது.**

- ❋ *பெற்றோருக்குக் கடமை உண்டு. மனைவி மக்களுக்குக் கடமை உண்டு என்ற உணர்வு வந்தவுடன் சீட்டாடுவது இல்லை, ஆடினால் அளவோடு ஆடுகிறான்.*
- ❋ *பிரச்சினை வரும்வரை கேள்வி வருவது இல்லை.*
- ❋ *தெரிந்த தவற்றை வேண்டும் என்றே செய்ததால்தான் பிரச்சினை வருகிறது.*
- ❋ *தெரிந்த கடமைகளை விரும்பிச் செய்வது அதிர்ஷ்டம்.*
- ❋ *சௌகரியத்தைத் தேடாதே, கடமையைச் செய்.*

❑ **மாயை என்பது புதிர் என்பது மரபு. மாயை என்பது புதிர் அன்று; அற்புதம் என்பது ஸ்ரீ அரவிந்தம்.**

- ❋ *தெரிந்த சர்வம் பிரம்மம் என்பதை நடைமுறைப்படுத்தினால் மாயை புரியும்.*
- ❋ *சர்வம் பிரம்மம் என்று தெரிந்தபின் அதை மறந்து வாழ்க்கை என்பது இருள், உடல் என்பது பொய் என்றால், அது மனம் செய்யும் தவறு. மனம் தெரிந்ததை விட்டுவிட்டு தெரிந்த தவற்றைச் செய்யும்பொழுது மாயை புரியாது. மாயை புரிய நாம் அறிந்தவற்றின் உண்மையை ஏற்கவேண்டும்.*

  *ஜீவாத்மா பிரம்மம் என்று ஆரம்பித்தால் பிரம்மம், பிரம்மத்தின் சக்தி மாயையாகத் தெரிகிறது. மாயை உலகை சிருஷ்டித்தது என்று புரிகிறது. அது புரிய மூன்று தத்துவங்களைக் கூறுகிறார். நிர்ணயம், அளவு, மறைவு என்ற மூன்று*



*தத்துவங்களைக் கூறுகிறார். அதன்மூலம் மாயை புதிர் அன்று; பிரகிருதி ஜடம் அன்று; லீலை விளங்காதது இல்லை என்ற நீண்ட விளக்கம் எழுதுகிறார். அடிப்படை புரிந்தபின் அனைத்தும் புரியும். சிருஷ்டிக்கு மேலும் விளக்கம் அளிக்க காலத்தின்மூலம் விளக்குகிறார். அத்துடன் அத்தியாயம் முடிகிறது.*

❑ **பரமாத்மா ஜீவாத்மா ஆனது, பிரம்மம் சிருஷ்டியாக மாறியது ஆகியன நீண்ட பகுதிகள்.**

- ❋ *ஜீவாத்மா பரமாத்மாவின் பகுதி. பரமாத்மாவை நம்பி வாழ்வது. அகந்தை திரையிட்டு ஜீவாத்மாவிலிருந்து பரமாத்மாவைப் பிரிக்கிறது. திரை அகன்றால் சத்தியம் புரியும்.*
- ❋ *கம்பெனி ஊழியன் கம்பெனியை நம்பி வாழ்கிறான். கர்வம் இதை மறந்து கம்பெனிக்கு எதிராக வேலை செய்து நடுத்தெருவில் நிற்கிறான்.*
- ❋ *பரமாத்மா பல பகுதிகள் ஆகி ஜீவாத்மா ஆகிறது. பரமாத்மாவின் சக்தி ஜீவாத்மாவின் குணமாயிற்று. ஜீவாத்மா பரமாத்மாவிற்குச் சரண் அடைவது முதல் பகுதி, மீதி உண்டு. அதன் குணமும் சரண் அடையவேண்டும். அவை அன்னைக்குச் சரண் செய்யப்படவேண்டும்.*

❑ **ஜீவாத்மா காலத்தில் இருப்பதால் காலத்தை அறியாமல் இந்த சூட்சுமத்தை அறியமுடியாது.**

- ❋ *சத்தியஜீவியம் மூன்று நிலைகளாகப் பிரிகிறது. பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்பவை அவை.*
- ❋ *காலத்திற்கு அந்த மூன்று நிலைகள் உள்ளன. அகந்தையிலிருந்து விலகி, ஜீவாத்மா தன்னைப் பிரபஞ்சத்தில் பரமாத்மாவாக உணர்வது பரிணாமம் பூர்த்தியாவது.*
- ❋ *காலத்திலிருந்து உள்ளே போய்க் கடந்த நிலையைக் காலத்தில் அறிந்தால் ஜீவாத்மா பரமாத்மா ஆகும்.*

- ❋ *சீட்டாட்டத்தில் வீட்டை மறந்தவன், மனைவியில் பெற்றோரை மறந்தவன் தன் கடமைகளை உணர்ந்து வீட்டிற்கு வந்து பெற்றோரை நினைத்தால் அவனுக்குப் பிரச்சினைகள் இல்லை, அதிர்ஷ்டம் வந்துவிட்டது எனப் பொருள். மனிதன் அதைச் செய்யாமல் சீட்டாடப் பணம் வேண்டும் எனப் பிரார்த்திக்கிறான். தாயார் சாப்பாட்டிற்கு வசதி இல்லாமல் இருக்கும்பொழுது மனைவிக்கு நகை வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறான்.*

- ❋ *எல்லாத் தத்துவங்களும் பொய், மெய் என்பதில் முடிகின்றன. சீட்டாட்டமும் மனைவிமீது மோகமும் பொய், வீடும் கடமையும் மெய். இதை விளக்கவேண்டியது இல்லை, புரிவதற்கும் ஒன்றும் இல்லை.*

  *பொய் போய் மெய் வருவது பகவானும் அன்னையும் சித்திப்பது ஆகும்.*

**முடிவுரை:**

பிரம்மம் முழுமை. அது ரிஷிகள் காணாத முழுமை என்ற கருத்தை இந்த அத்தியாயத்தில் ரூபம், மௌனம், அகண்டம், சிருஷ்டி, காலம், சலனம், முழுமை ஆகியவற்றால் பகவான் விளக்குகிறார். காலத்திற்கு மட்டும் மிக நீண்ட விளக்கம் தருகிறார். மாயை, பிரகிருதி, சக்தி என்பவை வெவ்வேறு, எதிரானவை என்ற மரபுக் கருத்தை மாற்றி, மாயை பிரகிருதியின் பகுதி, இரண்டும் சக்தியின் பகுதி, சக்தி ஈஸ்வரனின் பகுதி, ஈஸ்வரன் சத்புருஷனின் பகுதி என பிரம்மத்தின் முழுமைக்கு வருகிறார்.

ஜடத்தின் பின்னால் சென்றால் ஜடமான இடம் உண்டு. மனத்தின் பின்னால் சென்றால் மனத்தின் இடம் உண்டு. தொடர்ந்தால் ஆன்மாவுக்குரிய இடம் வெளிப்படும். அங்கு, காலத்தின் மூன்று நிலைகள் கண்ணுக்குத் தெரியும் என்ற மிக நீண்ட விளக்கம் அத்தியாயத்தின் இறுதியான 4, 5 பக்கங்களில் உள்ளது. காலம், கடந்தது, கடந்ததும் காலமும் இணைந்தது என்ற மூன்று நிலைகளை இல்லறம், துறவறம், இல்லறத்துள் உள்ள துறவறம் என்ற உதாரணத்தால் பல இடங்களில் காண்போம்.



1) *காலத்துள் உள்ள நாம் - மனிதன் - சிருஷ்டியின் இருண்ட பகுதியை மட்டும் காண்கிறோம்.*

2) *காலத்தைக் கடந்த ரிஷி சிருஷ்டியின் ஒளிமயமான பகுதியை மட்டும் காண்கிறார்.*

3) *ஒளி இருளுள் எழும். அது காலத்தைக் கடந்த நிலை, காலத்துள் எழுவது. அதுவே பிரம்மத்தின் முழுமையைக் காண்பது. அதை பிரம்ம ஜனனம் என்கிறோம்.*

மனிதன் தரையில், வண்டியில், குதிரையில் போனவன் இரயிலில், காரில் போனால், அவன் இன்னும் தரையிலேயே பிரயாணம் செய்கிறான். வேகம் மாறுகிறது. தரையைவிட்டு அவன் உயரவில்லை. விமானம் வந்தபின் பிரயாணம் தரையிலில்லை. ஆகாயத்திற்கு வருகிறது. விமானம், ஹெலிகாப்டர், விமானியில்லாத விமானம் போன்ற பல்வேறு விமானங்கள் அதிவேகமாகப் பறந்தாலும், அவை ஆகாயத்திற்குரியவை. அதைக் கடந்து விண்வெளிக்குச் செல்வதில்லை.

இவையிரண்டையும் கடந்தது விண்வெளியில் சஞ்சாரம் செய்யும் இராக்கட். அது 1950க்குப் பின் வந்தது. காலத்தின் மூன்றாம் நிலை உலகுக்குப் புதியது. பகவான் கண்டது. அதன் முக்கிய அம்சங்கள்,

- ✲ **சிருஷ்டியில் வலி, துன்பம், மரணம், வேதனை, கோரம், விகாரம் ஆகியவை படைக்கப்படவில்லை என்பது அங்கு விளங்கும்.**
- ✲ **மனிதன் தன்னை பிரம்மமாக, சிருஷ்டியாக மலரும் பிரம்மமாகக் காண்பான்.**
- ✲ **செயல்களின் வேகம் ஒளியின் வேகத்தைக் கடந்ததாக இருக்கும்.**
- ✲ **அனைவருள்ளும் தன்னை மனிதன் கண்டு, தன்னுள் அனைவரையும் காண்பான்.**

*முற்றும்*

❀❀❀

## The knowledge of the self in the Non-birth and Non-becoming and the changeless spirit within us is immortality

### அக்ஷர பிரம்மத்திலும், க்ஷர பிரம்மத்திலும் ஆத்மாவை அறிவது அமரத்துவம்

- *மோட்சம் பெறும் தவசி அக்ஷரப் பிரம்மத்தில் தன் ஆத்மாவை அடைக்கலம் செய்கிறார்.*
- *கிருகஸ்தன் க்ஷரப் பிரம்மத்தைத் தன் ஆத்மாவாகக் காண்கிறான்.*
- *வேத ரிஷிகள் கண்ட மோட்சம் மேற்சொன்னவாறு அக்ஷர, க்ஷரப் பிரம்மங்களில் தங்கள் ஆன்மாவைக் கண்டதாகும்.*
- *அதுவே இயற்கையோடு இணைந்த வாழ்வு.*
- *ரிஷிகள் அதை உடலில் கண்டனர்.*
- *பகவான் அதையே சத்தியஜீவியத்தில் காணவேண்டும் என்கிறார்.*

**உதாரணம்:**

- *கோபம் வாராதபொழுது நிதானமாக இருக்கலாம்.*
- *கோபம் வரும்பொழுது நிதானம் தவறும்.*
- *நிதானத்தை இழக்காதவர்க்கு உள்ளும் நிதானமிருக்கும்.*
- *கோபமே வாராதவருக்கு உள்ளும், புறமும் நிதானமிருக்கும்.*
- *அவருக்கு வேத ரிஷிகள் பெற்றதைப் பெறும் தகுதியுண்டு.*
- *பணமில்லாதபொழுது மனம் தாராளமாக இருப்பது, பணம் வந்தபின் இருக்காது. பணம் வந்தபின் முந்தைய தாராளம் அந்நிலையைக் குறிக்கும்.*
- *போலீஸ்காரனைப் பிச்சைக்காரன் வம்புக்கு இழுத்தால், போலீஸ்காரனுடைய நிதானம் அதுபோன்றது.*



- *கணவனை மனைவி அதிகாரம் செய்யும்பொழுது எரிச்சல் வாராமலிருப்பது கணவனுக்கு நிதானம்.*
- *நேருவுக்குப் பொறாமை என M.P.யின் குற்றச்சாட்டு நேருவுக்கு சிரிப்பு மூட்டுவது, அதுபோன்றது.*
- *ஈராக் அமெரிக்காவுக்குச் சவால் விட்டால், அமெரிக்கா கொதித்து எழாதது, அதுபோன்றது.*
- *புயல் அடிக்க ஆரம்பித்தால், ஒருவர் மனம் நிதானத்தை நாடிப் போனால், புயல் அந்த நிதானத்தால் அடங்கும்.*
- *சுத்தமான அதிகாரிக்கு கறுப்புப் பண முதலாளி அவர் சுத்தத்தால் மனம் மாறிப் பணம் தர முன்வாராமல் விஷயத்தைப் பேசுவது வேத ரிஷிகள் பெற்ற யோகத் தகுதிக்கு இவர் உரியவர் எனப் பொருள்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தன் பழக்கங்களையும், உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் விடுவதே சிரமம். அன்னையை அழைப்பது அத்தனை சிரமம் இல்லை என்பதை அவர் காண்பார்.

***அன்னை எளிது. மாற்றம் எளிதன்று.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம் நிலை, காலத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. நிலையை மாற்றவோ, காலத்தைச் சுருக்கவோ, நாம் காலத்தைக் கடக்க வேண்டும். மனத்தையே கடப்பது சிறந்தது.

***நிலையை மாற்றுவதற்குப் பதிலாக காலத்தைக் கடப்பது நல்லது.***

## இதுவோ உம் ரௌத்திரக் கருணை!

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

அன்னை தன் அறியாமையை நோக்கி, ''ஏன் வந்தாய்? போய்விடு'' என்று கூறியிருக்கிறார் என்று உணர்ந்ததும், தன்னறியாமைக்கு வெட்கினாள். "அந்தக் கூட்டிலிருந்து விடுபட்டு அன்னையின் அருளை சுவாசிக்கத் தான் ஏங்கியது என்ன? இப்போது அது கிடைத்ததும், அருமையறியாமல் வீட்டை நினைத்து ஏங்குவது என்ன?" என்று தன்னைத் தானே திருத்திக்கொண்டாள். ப்ரீத்தியின் ஒவ்வோர் அன்னை அனுபவத்திலும் தானே அதை அனுபவித்த ஆனந்தம் எண்ணினாள். "*நீங்கள் எல்லோரும் என்னை எளிதாக அடைந்துவிட்டதால் அதற்கு நீங்கள் மதிப்புத் தருவதில்லை*" என்று அன்னை ஒரு முறை கூறியதை எண்ணியவுடன் தன் பிழை புரிந்தது. அன்னையின் அளவுகடந்த கருணை புரிந்தது.

"*நீங்கள் எல்லோரும் என் குழந்தைகள். உங்கள் எல்லோரையும் பகவானிடம் அழைத்துச் செல்லவே என்னுள்ளத்தில் உங்களை ஏற்றிருக்கிறேன். நீங்கள் பகவானிடமிருந்து விலகிச் சென்றால் என்னுள்ளம் புண்படும் என்பதை உணர்வீர்களானால் அது ஒன்றே போதும்*" என்று ஒரு முறை ஒரு சாதகரிடம் அவர் கூறியிருந்ததை ப்ரீத்திமூலம் அறிந்திருந்ததை இப்போது நினைவுகூர்ந்தாள். அவளை மூடிய மேகங்கள் கலைந்தன, தெளிவேற்பட்டது. 'அன்னையே! உம் குழந்தையை மன்னித்துவிடுங்கள்' என்று அந்தப் பொற்பாதங்களில் மானசீகமாய் மன்னிப்பு வேண்டினாள்.

அறைக் கதவைத் தட்டும் மெல்லொலி கேட்டது. கடிகாரத்தைப் பார்க்கிறாள். மணி 12. இந்த நள்ளிரவில் யார் கதவைத் தட்டக்கூடும்? ஒருவேளை, என் பிரார்த்தனையை ஏற்று மன்னித்தருள அன்னை வந்திருப்பாரோ என்று எண்ணியவண்ணம் கதவைத் திறக்க, அன்னையேதான்! அந்தப் புன்னகை, கருணை ததும்பும் விழிகளால் அவளைத் தழுவிக் கொண்டார்.

அங்கு வீட்டில், நேரமாகியும் தோழி வீட்டிற்கு என்று சொல்லிச் சென்ற உமா திரும்பாததால் மாமி கவலை கொண்டாள். பத்து மணிக்குப் போனால் அரை மணி, ஒரு மணி நேரத்தில் வீடு திரும்பிவிடும் உமா இன்னும் வரவில்லை. என்னவென்று நினைப்பது? அவள் பேச்சைக் கேட்டு, அவளை பிரெஞ்சுக் கிளாஸில் சேர்த்தது தப்போ? இன்று அவளைத் தோழி வீட்டிற்கு அனுப்பியது தவறோ? வழியில் ஏதேனும் விபத்து நேர்ந்திருக்குமோ? எங்கு போய்த் தேடுவது? பக்கத்துத் தெரு என்று சொன்னாளே. அவள் படிக்கும் அறைக்குச் சென்று ஏதேனும் தோழியின் புத்தகம், பெயர் கிடைத்தால் பக்கத்துத் தெருவில் போய் விசாரிக்கலாமா என்று ஏகமாய்ப் பதறி, கலங்கி, அவள் படிக்கும் அறைக்குச் சென்று புத்தகங்களைத் தேட முயன்றவுடன் மேலே நீண்ட தாளில், அழகிய கையெழுத்தில் ஏதோ எழுதி, அதன்மீது 'வெயிட்' வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தாள். அதைக் கையில் எடுத்தவுடன் உடல் நடுங்கியது. உமாவின் எழுத்துதான் அது.

அன்புள்ள மாமி! என்று தொடங்கியிருந்தது. நடுங்கியவண்ணம் அதைப் படித்தாள்.

மாமி உங்களுக்கு என் மனப்பூர்வமான நன்றிகளை முதலில் சொல்லிக்கொள்கிறேன். பாண்டிச்சேரிக்கு வந்தபோது பிரெஞ்சு கற்கும் ஆவல் ஏதும் இருக்கவில்லை. அன்று நீங்களும், மாமாவும் ஒரு நண்பர் வீட்டில் சடங்கு என்று வெளியே சென்றிருந்தீர்கள். அப்போது தனியே இருந்த நான், பக்கத்து வீட்டுப் பெண் கிருபாவைப் (என் வயது) பார்த்தேன். அவள் நட்பு மகிழ்ச்சியாய் இருக்கும் என்று நினைத்து பக்கத்து வீட்டிற்குப் போனேன்.

வாசல் பக்கத்தில் நின்றிருந்த அவள், வெளியே வந்து என் கையைப் பிடித்து அன்புடன் சிரித்தாள். "உன் நட்பு எனக்கு மிகவும் பிடிக்கும் உமா. ஆனால் உன் மாமாவிற்குத் தெரிந்தால், நீ என் வீட்டிற்கு வந்ததற்கு உன்னைக் கோபித்துக்கொள்ளக்கூடும்'' என்றாள்.

''ஏன் கிருபா அப்படிச் சொல்கிறாய்?'' என்றேன். ''நாங்கள் ஸ்ரீ அரவிந்தாஸ்ரமத்து சாதகர்களுடன் நட்புடையவர்கள். அது உங்கள் வீட்டார்க்குப் பிடிக்காது" என்றாள்.

''ஆசிரமமா? அது ஏன் மாமாவுக்குப் பிடிக்காது?'' என்றேன் மேலும்.

அப்போது அங்கே ஒரு சாஸ்த்திரியார் வந்தார். ''அம்மா குழந்தே! அதைப் பற்றி என்னிடம் கேள்'' என்று கூறியவண்ணம் வந்தார். ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

''இந்த ஊரில் ஸ்ரீ அரவிந்தாஸ்ரமம் என்று ஓர் ஆஸ்ரமம் இருக்கிறது. அங்கே பாரிசிலிருந்து வந்த பெண்மணி என்று எல்லோரும் நினைக்கும் ஒருவர் இருக்கிறார். அவர் அன்னை பராசக்தி என்பது லலிதாம்பிகையை உபாசித்த எனக்குத் தெரியும்.



ஸ்ரீ அரவிந்த மகரிஷிக்குத் தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள இயல்பான ஆன்மநாட்டம் வேண்டும்'' என்றார் அவர்.

எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று. ''மாமா! சொல்லுங்கள் மாமா. நீங்கள் அவரைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று ஆர்வத்துடன் கேட்டேன்.

"பார்க்கிறேனம்மா. தினமும் பார்க்கிறேன். உனக்குப் பிரெஞ்சு தெரியுமா?" என்றார்.

"தெரியாதே" என்றேன்.

"படி. பிரெஞ்சுப் படி. அவர் பிரெஞ்சில் எழுதியிருப்பதைப் படி. நீயே உணர்வாய்" என்றார்.

நீங்கள் திரும்பி வருமுன் வீட்டிற்கு வந்துவிட்டேன். ஆனால் சாஸ்த்திரியார் கூறிய அன்னை பராசக்தியைத் தரிசிக்க எழுந்த ஆவலை அடக்க முடியவில்லை. உங்களிடம் சொல்ல முடியவில்லை. நீங்களோ ஆசிரமம் என்றாலே, ஏதோ பாவச் சொல்போல நடந்துகொண்டீர்கள். அதனால் என் ஆவலைச் சொல்லாமல் பிரெஞ்சு கற்க அனுமதி கேட்டேன். உங்களை அறியாமல் நீங்களே என் தெய்வத்தின் கோயிலுக்கு எனக்கு வழிகாட்டிவிட்டீர்கள். பிரெஞ்சுக் கிளாஸில்தான் ஆசிரமவாசி ப்ரீத்தி என் தோழியானாள். அவள் பேச்சில் அன்னையை அனுபவித்தேன். உள்ளத்தில் ஆர்வத்தீயை வளர்த்தேன். நேற்று என் கனவில் வந்தார். இன்று நான் அவரிடம் போகிறேன். என் வாழ்வுப்பணி அன்னையின் தொண்டுதான் என்று என் உள்ளுணர்வு உணர்த்தியதை மறுக்க முடியவில்லை. நீங்களனைவரும் ஒரு நூற்றாண்டிற்குப் பிறகு தேடப்போகும்

இறையன்பு இன்று என்னைத் தேடி வந்துவிட்டது. எப்படியும் இதை நான் அடைய உதவிய தாங்களும், மாமாவும் என் நன்றிக்கு உரியவர்கள் என்பதை மறக்கமாட்டேன்.

'நான்' அற்றுப்போன
உமா,

என்றிருந்தது. மாமா வந்து உமா எங்கே என்று கேட்டால் என்ன சொல்வது? நானல்லவோ அவள்மீது கொண்ட பாசத்தால் அவள் பிரெஞ்சு கற்க சிபாரிசு செய்தேன். அனுப்ப மறுத்திட்ட நாத்தனாரை வலுக்கட்டாயப்படுத்தி உமாவை அழைத்து வந்தேன். அவர்களுக்கு என்ன பதில் சொல்ல? ''உமா! மாமியை இப்படி ஏமாற்றிவிட்டாயே'' என்று கலங்கினாள் மாமி.

அப்போது மிகுந்த கவலையுடன் உமாவின் தாய் அங்கு வருகிறாள்.

''ஐயோ! இப்போது இவள் எங்கே வந்தாள்? உமாவைத் தேடக்கூட முடியாமல் போய்விட்டதே. இப்பொழுது இவளுக்கு என்ன பதில் சொல்வேன்'' என்று மேலும் மாமி கலங்கினாள்.

''கோமதி! உமா இங்கு இல்லையல்லவா?'' என்று உமாவுக்குத் தெரியாமல் ஏதோ பேச வந்திருப்பதை உணர்த்தினாள்.

''ஆமாம் மைதிலி! அவள் இங்கு இல்லை'' என்று மிகவும் தயங்கிக் கூறினாள் கோமதி.

''நல்லதாயிற்று. உன்னிடம் மனம் விட்டுப் பேசவேண்டும்'' என்றாள் உமாவின் தாய்.



கலக்கம் தீராமலேயே நின்றாள் கோமதி. கொஞ்ச நாட்களாகவே உமாவின் அப்பா அவள் கல்யாணத்திற்காக வரன் தேடுவதும், ஜாதகம் பார்ப்பதுமாய் இருக்கிறார். காலையில் வெளியே போனால், மாலை கடந்துதான் வீட்டிற்கு வருகிறார். திரும்பி வரும்போது நிறைய சோகத்தைச் சுமந்துகொண்டு வருகிறார். என்னவென்று கேட்டாலும் எதுவும் சொல்வதில்லை. ''உமாவின் கல்யாண விஷயமாய் ஜோதிடரைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டதற்கு, ''எல்லாம் எனக்குத் தெரியும், பேசாமலிரு'' என்று கோபமாய்க் கூறினார்.

என்ன நடந்திருக்கும் என்று என்னால் யூகிக்க முடியவில்லை. நேற்று இவருக்குத் தெரியாமலே நான் ஒரு ஜோதிடரைப் போய்ப் பார்த்தேன். உமாவின் ஜாதகத்தைக் காட்டி, ''கல்யாண வேளை வந்துவிட்டதா பார்த்துச் சொல்லுங்கள்'' என்றேன். கையில் வாங்கிய சில நிமிஷங்களில், ''இந்த ஜாதகரின் பொறுப்பு உங்கள் கையில் இல்லை. இதைப் பார்ப்பதால் உங்களுக்கு ஒரு பயனும் இல்லை'' என்றார். ''என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன். ''இது தேவாம்சம் பொருந்தியது. மனிதர்களோடு ஒட்டாது'' என்றார். மேலும் கேட்க எனக்குத் துணிவில்லை, குழப்பம். உமாவின் தந்தை தினமும் சோகமாய்த் திரும்பியதன் காரணமும் புரியவில்லை. அச்சத்துடன் வீட்டிற்கு வந்தேன். திடீரென்று உமாவின் அப்பா, ''சாமியிடம் உத்தரவு கேட்டு ஒரு வரனை முடித்துவிடுவோம். அவள் ஜாதகத்தைக் காட்டினால் யாரும் அவளுக்குக் கல்யாண இராசி இல்லை என்கிறார்கள்'' என்று கூறினார். அதுதான் அவளை அழைத்துக்கொண்டு போய்விட எண்ணி வந்தேன். பிரெஞ்சு கிளாஸ் போயிருக்கிறாளா? என்றாள் உமாவின் தாய்.

கோமதி சிலையாக நின்றாள். என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

“என்ன கோமதி! எங்கே உமா” என்றாள்.

“என்ன சொல்ல மைதிலி? ஒரு தோழி வீட்டிற்குப் போய்ப் புத்தகம் கொடுத்துவிட்டு வருவதாய்ச் சொல்லி காலை 9.30 மணிக்குப் போனாள். அவள் மாமாவிற்கும் தெரியாது. அவள் தோழியின் விலாசம் தேட புத்தகங்களைப் புரட்டப் போனேன். கடிதம் எழுதி வைத்திருக்கிறாள்” என்று அழுதுகொண்டே கடிதத்தைக் கொடுத்தாள்.

ஜாதகம் கூறியது, உமா தான் வந்தபோது அமைதியாய் இருந்தது, யாவற்றையும் எண்ணிப் பார்த்தாள் உமாவின் தாய். யாரை என்ன சொல்ல? அன்னையின் அழைப்பு யாருக்கு உண்டோ? யாரறிவர்? அகிலம் அன்னைக்குச் சொந்தம் அல்லவா!

*முற்றும்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆன்மீகத்தை அறிவுக்கு விளக்கும் வகையில் பகவான் எழுதினார்.

மொழியின், உரைநடையின் தரத்தையே இதற்காக உயர்த்தினார்.

எழுத்தின் பாணியின் தரத்தை உயர்த்தினார்.

***புதிய அறிவு, புதிய மொழி, புதிய யோகம்.***



**“Agenda”**

**It teaches Mother as one would teach a small child or animal**

**அது அன்னைக்கு சிறு குழந்தைக்குக் கற்பிப்பதுபோல - விலங்குக்குக் கற்பிப்பதுபோல - எல்லாச் சிறு விஷயங்களையும் தொடர்ந்து நாம் கற்கும்வரை கற்பித்தது**

- *அது என்பது சத்தியஜீவியம்.*
- *‘புதுவைக்குப் போ’ என்ற இறைவன் குரல் பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு விபரம் கூறவில்லை.*
- *அழுத குழந்தை சம்பந்தருக்குப் பார்வதி பால் கொடுத்தார். சிவபெருமான் பரவை நாச்சியாரிடம் தூது சென்றார்.*
- *ஒரு சொல்லால் உத்தரவு தருவதிலிருந்து விவரமாக என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எப்பொழுது செய்ய வேண்டும், எந்த அளவில் செய்ய வேண்டும் என்பதுவரை சொல்வதும் சத்தியஜீவியத்திற்குரியது. எந்த அளவில் பெறுகிறோம் என்பது நம்மைப் பொருத்தது.*
- *ஏதோ ஒரு சமயம் இந்த உண்மையை தங்கள் வாழ்வில் பார்க்க விரும்புபவர் இந்த எண்ணத்தை அல்லது ஆசையைச் சமர்ப்பணம் செய்தால், அன்று நம் கை நம்மையறியாமல் எந்த டிரஸ் போட்டுக்கொள்ளலாம் எனக் காட்டுவதையும், அதை ஏன் போட்டுக்கொண்டோம் என்பதையும் காட்டும்.*
- *1972இல் பகவான் ஸ்ரீ அரவிந்தர் நூற்றாண்டிற்காக அவர் எழுதியவற்றை 30 வால்யூம் ஆன செட்டாகப் பிரசுரிக்க அன்னை விரும்பினார். தத்துவம் என்பதால் இப்புத்தகங்கள் விற்கா. The Life Divine, Synthesis of Yoga தனிப் புத்தகமாக விற்க 1951இல் அச்சிட்டவை 1970வரை விற்க முடியவில்லை. இந்த செட்டை யார்*

*வாங்கப் போகிறார்கள், எப்படி விற்பது, எத்தனை செட் அச்சடிப்பது, 100 செட் விற்பதே அரிது என அச்சாபீஸ் சாதகர்கள் தயங்கிய காலத்தில் அன்னை 5000 செட் அச்சடிக்கச் சொன்னார்கள். அவை விற்றுப்போய் அடுத்த செட் 35 vol.இல் தயாராகிவிட்டது.*

- *சொத்து வாங்குபவர் அன்னையை நம்பினால், இது வேண்டாம், அதை வாங்கு என்பதைக் காட்டுவதை அன்பர்கள் கண்டிருக்கிறார்கள்.*
- *எந்த வக்கீலிடம் கேஸ் போகவேண்டும் என்பது அன்னை கட்சிக்காரருக்குக் காட்டுவது அற்புதமாக இருக்கும்.*
- *ஆப்பரேஷனுக்குப் போக இருப்பவருக்கு எந்த டாக்டரிடம் போகவேண்டும் என்பது ஆப்பரேஷன் இல்லாமல் முடிகிறது.*
- *இந்த விமானத்தில் ஏறாதே, அடுத்த பஸ்ஸில் போ என்பதை அன்னை உணர்த்தும்விதம் அன்பர்கள் அறிந்தது. அந்த விமானம் பற்றி எரிந்தது. அந்த பஸ் விபத்திற்குள்ளாயிற்று.*
- *பரீட்சைக்கு எந்த கேள்விகளைப் படிப்பது என்பதையும் அன்னை அவருடைய பாணியில் கூறுகிறார்.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அழைப்பை மீறிய பயம், பெரு முயற்சியை மீறும் எண்ணம் ஆகியவை நம் அடிப்படை நம்பிக்கையை விரிவுபடுத்த வேண்டும் என்று அறிவிக்கின்றன. அதைச் செய்தால் பயம் மறைகிறது. சரணாகதியை எதிர்க்கும் எண்ணம் சரணடைகிறது.

***அழிய மறுக்கும் பயம், சரணாகதியை எதிர்க்கும் எண்ணம் அடிப்படையில்லை என அறிவிக்கிறது.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

கர்மயோகி

**834) உயர்ந்த சிஷ்யன் சாதாரணக் குருவுக்கு அமைந்தால், அவனுடைய நம்பிக்கை, குருவின் நம்பிக்கையைவிட உயர்ந்ததாக இருக்கும். உயர்ந்த குருவுக்குள்ள நம்பிக்கை - சிஷ்யன் மீதுள்ள நம்பிக்கை - சிஷ்யனுடய நம்பிக்கையைவிட உயர்ந்ததாக இருக்கும்.**

***நம்பிக்கையே குரு-சிஷ்ய நிலையை நிர்ணயிக்கும்.***

மனிதன் பொருளை நம்புவான், பொன்னை நம்புவான், பண்பை நம்பமாட்டான். பண்புள்ள குருவை நம்ப மறுப்பான். ராமகிருஷ்ண பரமஹம்சர் கடவுளே என அனைவரும் கூறியதை அவருடைய இறுதிக்காலம்வரை சுவாமி விவேகானந்தர் சந்தேகித்தார். அன்னை, பகவானுடனிருந்தவர் அவர்களை ஏற்றார்களே தவிர, அவர்கள் கூறிய யோக இலட்சியத்தை நம்பவில்லை.

மனிதன் அன்னையை நம்பவில்லை என்று சொல்வதைவிட மனிதனுக்கு மனத்தில் நம்பிக்கை உதயமாகவில்லை என்று கூறலாம். ஒரு சிறுவன் ஒரு மகானை அணுகித் தம்மை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ளச் சொன்னான். அவனிடம் அவர் ஒரு சிறு பெட்டியைக் கொடுத்து, அதைப் பல மைல் தூரத்திலுள்ள ஒருவரிடம் கொடுத்துவரச் சொன்னார். திறக்கக்கூடாது என உத்தரவு. சிறுவன் மனம் போராடுகிறது. பாதி வழி வந்துவிட்டான். இனி பொறுக்காது எனத் தெரிந்து பெட்டியைத் திறந்தான். அதனுள்ளிருந்து ஒரு சுண்டெலி துள்ளிக் குதித்து ஓடியது. குருவிடம் வந்து மன்னிப்புக் கேட்டான். **கட்டுப்படாத மனத்தைக் கட்டுப்படுத்தக் காலத்திற்கும் முயன்று வெற்றி பெற்று குருவின் காலத்திற்குப்பின் அவர் ஸ்தானத்தை ஏற்றான்.** சிறுவனுக்குப் பெரியவர் மீது மரியாதை இல்லை, நம்பிக்கை இல்லை எனப் பொருளில்லை. மனம் கட்டுப்படாது. கட்டுப்படாதது அவன் மனம் இல்லை, அது மனித மனம்.

- *சிஷ்யனுக்குக் குரு அமைவதும், குருவுக்கு சிஷ்யன் அமைவதும் மனைவி, பிள்ளைகள் அமைவதைப்போல் பூர்வஜென்மப் புண்ணியத்தால் அமையும்.*
- *பூர்வ ஜென்மத்தில் செய்யாத புண்ணியத்தை இன்று திருவுருமாற்றத்தால் செய்ய உதவும் கருவி சரணாகதி.*
- *மனித குரு சட்டப்படி இறைவன், தகப்பன், தாயின் அன்புள்ளவர். நடைமுறையில் விலக்கானவற்றை விலக்கினால், குரு என்பது மாமியார், முதலாளி, பிசாசு, பூர்வ ஜென்மப் பாவத்தால் வந்து மாட்டிக்கொண்ட சந்தர்ப்பம். கொடுமையை ரசிப்பவர் அதிகம்.*
- *ஒரு மட்டமான குரு ஒருவனுக்கு அமைந்தால், அவன் ஆழ்மனம் மட்டமானது, அதைத் திருவுருமாற்ற குரு அமைந்தார் என்று விளக்கம்.*
- *"நீ செய்யும் காரியங்களெல்லாம் வெற்றி பெறக் கூடாதல்லவா?" என அன்புடன் ஆசீர்வதித்தார் அதுபோன்ற குரு ஒருவர்.* **அவர் செய்த அத்தனைக் காரியங்களும் பொசுங்கிப் போயின**. *அவர் சொல் அவருக்கே பலித்தது.*
- *குரு உயர்ந்தவரானால், சிஷ்யன் தவறானவனாகவோ, கிறுக்கனானவனாகவோ, கெட்ட செய்தியைக் கேட்டு முகம் மலரும் 'புண்யாத்மா'வாகவோ அமைந்தால் சிஷ்யன் மண்ணோடு மண்ணாகப் போவான். அவனால் அவர் பட்டது அனந்தமாக இருக்கலாம். அதுவும் அவருக்கு நல்லது. அப்படிப்பட்ட சிஷ்யன் ஒருவன், "ஏன் எனக்கு இவையெல்லாம் நடந்தன" எனக் கேட்டு நடந்தவற்றை விவரமாகக் கூறினான். அவன் தனக்குச் செய்த அத்தனையையும் வரிசையாகச் சொல்லி, "இதற்கும், உனக்கு நடந்ததற்கும் தொடர்புண்டா எனச் சிந்தனை செய்" என்றார். "ஏன் என்னிடம் இதை முன்பே சொல்லித் தடுக்கவில்லை" என்றான். "நீ பிரியமாகச் செய்வதைப் பிரியமாக ஏற்பது என் கடமை என ஏற்றேன்" என்றார்.*
- *குரு-சிஷ்ய உறவைக் கடந்த உயர்ந்த உறவு கணவன் - மனைவி உறவு.*

❀❀❀



**835) கட்டுப்படாததை அடக்குவது, சக்தி force, தன்னையறிவது, மேலிருந்து உள்ளே போவது, உள் மனம் விழிப்பது, பரமாத்மா முன்னிலையில் சமர்ப்பணம் செய்வது, பரந்த ஆழ்ந்தகன்ற விழிப்பு, பூரண ஆத்ம சமர்ப்பணம், உடலின் சைத்தியப்புருஷன் செயல்படுதல், அகந்தை அழிதல், காலத்தைக் கடந்த பொறுமை, முரண்பாட்டில் உடன்பாட்டைக் காண்பது, நம் நித்தியத்தை அறிதல், ஆன்மா ஜடத்தை ஆள்வது, சிருஷ்டியை அறிவது (process), சர்வம் பிரம்மம் என்பது ஒன்று தவிர மற்றதில்லை என்பதுடன் இணைத்துப் புரிந்துகொள்வது, 'அது' தென்படுவது, அறிவு புலனிலிருந்து விடுபடுதல், ஜகத்குரு ஆகியவை யோகத்தின் முதற்படிகளாகும்.**

***யோகத்தின் முதற்படிகள்.***

50 வயதான பின் சன்னியாசத்தில் நாட்டமுள்ளவர்கள் உண்டு. அவர்களில் சிலருக்குக் குடும்பப் பற்று மேலோங்கி இருப்பதால், மனம் போராடும். பல காரணங்கள் கற்பித்துக் கொள்வார்கள். க்ஷேத்திரச் சன்னியாசம் பெற்றதாய் நினைப்பார்கள். அவர்கட்கு, சன்னியாசத்தின் மீது நாட்டமிருப்பதால் ஆன்மாவின் வாடையால் சில சமயம் மௌனம் வருவதுண்டு, பிறர் எண்ணங்கள் தெரிவதுண்டு, நினைப்பது நடப்பதுண்டு, கனவு பலிப்பதுண்டு, கீதை படிக்கும்பொழுது ஆத்மா மலர்ந்து அற்புதமாக இருப்பதுண்டு. இவையெல்லாம் உயர்ந்த அறிகுறிகள். தவத்திலிருந்து காத தூரத்திலுள்ளவை.

சமர்ப்பணம் என்பது சரணாகதிக்கு முன்நிலை. நமக்கு ஒரு பிரச்சினை எழுந்தால் தொடர்ந்து சமர்ப்பணம் செய்தால் அது தீருகிறது. பொதுவாகப் பெரிய காரியங்கள் எளிதாக முடியும்பொழுது சமர்ப்பணம் நமக்குப் பலித்ததாக நாம் அறிகிறோம். அது உண்மையானாலும் அது உண்மையின் பகுதி, முழு உண்மையில்லை.

✪ *பெரும் பிரச்சினைகளைத் தீர்க்கும் சமர்ப்பணமும் வாய்ப்பைப் பெற்றுத் தாராது.*

✪ *வாய்ப்பைப் பெற்றுத் தரும் சமர்ப்பணமும் வாழ்க்கைக்கு உரியதேயன்றி யோகத்திற்குரியதன்று.*

✪ *யோகச் சமர்ப்பணம் மேல் மனத்திலிருந்து உள் மனத்தைக் கடந்து அடிமனத்திற்குப்போய் அங்கு, குகையில் ஒளிந்திருக்கும் சைத்தியப்புருஷனை அடைவது.*

✪ *எந்தச் செயலுக்கும்* concentration *தியானம் தேவைப்படுவதைப் போல் சமர்ப்பணத்திற்கும் தியானம் தேவைப்படும்.*

✪ *அது மனத்திற்குரிய தியானமன்று. மனம், வாழ்வு, உடலுக்குரிய சமர்ப்பணத் தியானம். ஜீவ நிஷ்டை* all inclusive concentration *எனப்படும்.*

✪ *அது மௌனத்தாலானது.*

✪ *அந்த மௌனம் மனத்துடன் முடிவதில்லை.*

✪ *எல்லாக் கரணங்களையும் தழுவும் மௌனம் அது.*

✪ *அந்த மௌனம் சித்தித்தவருக்குச் சிந்தனையில்லை.*

✪ **சிந்தனையற்ற மௌனம் சித்திப்பது சமர்ப்பணத்திற்குரிய மௌனமாகும்.**

✪ *அம்மௌனம் ஒருவருடையதன்று, பிரபஞ்சத்திற்குரியது.*

✪ *அம்மௌனம் மனத்தில் எழுந்தால், நம்மைக் கடந்து பரவி உலகெங்கும் சென்று, பூமியைக் கடந்துவிடும்.*

இந்தச் சமர்ப்பணம் யோகத்திற்குரிய முதற்படி என்பதை நாம் அறிவோம். வாழ்வில் எது மலைபோன்றதோ, அது யோகத்தில் ஆரம்பம். எல்லா யோகங்களும் முடியுமிடத்தில் பூரணயோகம் ஆரம்பிக்கிறது. பூரணயோக முதற்படிகள் அன்பனுக்கு எட்டாக் கனி. அவற்றுள் பலவற்றை மேலே கண்டோம். வாழ்க்கையின் பெரு நிகழ்ச்சிகளை யோகத்தின் அம்சமாகக் கருதுவது இயல்பு. அவற்றுள் உண்மையில்லை.

❀❀❀

*தொடரும்.....*





# ஆந்திராவின் ஆன்றைய தேவை தொழில் முனைவர்கள்

N. அசோகன்

இந்தியா வளம் பெற்றுப் பொருளாதாரத்தில் அமெரிக்காவிற்கு நிகராக அடுத்த 20 ஆண்டுகளில் தலையெடுக்க வேண்டுமென்பது இந்நாட்டில் பல பேருடைய விருப்பமாகவுள்ளது. இந்த விருப்பம் இந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் நிறைவேற வேண்டுமென்றால் இந்தியாவின் இளைய சமுதாயம் சம்பளத்திற்கு வேலைக்குப் போவதை விட்டுவிட்டு, சுயதொழிலில் தைரியமாக இறங்க வேண்டும். தொழில் வளம் நாட்டில் பெருகினால், உற்பத்தியும், வருமானமும் தானே பெருகும். தொழில் வளம் உச்சகட்டத்தை அடையும்பொழுது இப்பொழுது கனவாகத் தெரியும் அபரிமிதமான செல்வம் அடுத்த 20 ஆண்டுகளில் நிஜமாகி அமெரிக்காவிற்கு நிகராக இந்தியா தலையெடுப்பதும் உண்மையாகும். இதுதான் தியரி என்றாலும் நடைமுறையில் சுயதொழில் செய்வது பற்றி அபிப்பிராயங்கள் எப்படியுள்ளன என்று பார்ப்போம்.

தொழிற்பேட்டைகளில் உள்ள பல தொழிற்சாலைகள் இலாபகரமாக இயங்க முடியாமல் மூடியிருப்பதைக் காண்கின்ற பல பேர் சுயதொழிலில் இறங்குவதே ஒரு அறிவில்லாத வீண் வேலை என்ற முடிவிற்கு வந்துவிடுகின்றனர். வெற்றிகரமாகத் தொழில் செய்கின்ற ஒரு சிலரைப் பார்க்கின்ற, சம்பளத்திற்கு வேலை செய்கின்ற உறவினர்களும் நண்பர்களும், “நாம் ஏதோ எட்டாயிரம், பத்தாயிரந்தான் சம்பாதிக்கின்றோம். இவரோ விடாமுயற்சியுடன் தொழில் செய்து இலட்சக்கணக்காகச் சம்பாதிக்கின்றார். இவரைப்போல் நம்மால் தலையெடுக்க முடியவில்லை!’’ என்று வருத்தமும் படுகின்றார்கள்.

தொழில் செய்யும்பொழுது ஏன் பலர் தோற்றுப் போகின்றார்கள், ஒரு சிலர் மட்டும் வெற்றி காண்கிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

தொழிலுக்குத் தேவையானவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். முதல் வகை புறத் தேவைகள். இரண்டாம் வகை அகத் தேவைகள். முதலீடு, சரக்கு, டெக்னாலஜி, கட்டடம், நிர்வாகம் ஆகியவை புறத் தேவைகள். திறமை, கடின உழைப்பு, தைரியம், உற்சாகம், விடாமுயற்சி, நல்லெண்ணம் ஆகியவை அகத் தேவைகள். இவை இரண்டும் குறையில்லாமல் இருந்தால் தொழில் அபரிமிதமாகப் பலிக்கும். தொழில் நஷ்டமடைகிறதென்றால் அகத் தேவையோ, புறத் தேவையோ, ஏதேனும் குறைவாக இருக்கும். இந்தக் குறைபாட்டை உதாசீனம் செய்து, எப்படியேனும் சமாளித்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து தொழிலை ஆரம்பிப்பது தொழில் விளங்காமல் போவதற்கு ஒரு முக்கியக் காரணம். தொழிலில் வெற்றி காண்பதற்கு முன், வெற்றி கண்டதுபோல் நடந்துகொள்வது, அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது, ஆடம்பரச் செலவு செய்வது ஆகியவை தொழில் பலிக்காமல் போவதற்கு முக்கியக் காரணங்கள். இத்தகைய குறைபாடுகள் உள்ளவர்கள் பேசாமல் வேலைக்குப் போவது நல்லது.

சென்னையில் I.N.D.I.A. டிரஸ்ட் என்றவொரு ஸ்தாபனம் உள்ளது. இந்த ஸ்தாபனத்தை நடத்துபவர்கள் தேசபக்தியும், சேவை மனப்பான்மையும் மிக்கவர்களாக உள்ளார்கள். தொழில் முனைவர்களாகத் தலையெடுக்க விரும்புகின்றவர்களுக்கு இந்த ஸ்தாபனம் இலவசப் பயிற்சி அளிக்கின்றது. பயிற்சி பெற்றவர்கள் சம்பாதித்து, பின்னர் fees கட்டும்வரை இந்நிறுவனம் பொறுமையாகக் காத்திருக்கிறது.

நாட்டில் தொழில் வளம் பெருகுவதே சுபிட்சத்திற்குச் சிறந்த வழி என்று குறிப்பிட்டேன். தொழிலில் ஒரு சிலர் வெற்றி காணும்பொழுது அதைப் பார்த்து பலரும் அதே தொழிலில் இறங்குகின்றனர். இதனால் தொழில் வளம் பெருகுகின்றது. சிவகாசியில் அச்சு வேலையும், திருப்பூரில் பனியன் தொழிலும், நாமக்கல்லில் poultry தொழிலும் பெருகியது இவ்வாறுதான்.



இன்று ஒரு பாக்டரியில் ஊழியனாக வேலையில் சேர்பவன் நாளை தானே அத்தொழில் துவங்குவது சுபிட்சத்திற்கு அறிகுறி. இன்றைய தொழிலாளி நாளைய முதலாளி என்ற மனோபாவம் நாட்டில் பரவினால் இந்தியாவும், அமெரிக்காவிற்கு நிகராகத் தொழில் மயமாகும். அப்பட்சத்தில் நாம் எதிர்பார்க்கும் அபரிமிதமான வருமானம் என்ற கனவும் நிஜமாகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாழ்வு நம் நோக்கங்களால் உருவாகிறது. நோக்கங்களை நிர்ணயிப்பது அறிவு. மனிதனுடைய கவலைகளும், சந்தோஷமும், பிரச்சினைகளும் அவனுடைய அறிவால் நிர்ணயிக்கப்படுகின்றன.

***அறிவு மனிதனுடைய அளவுகோல்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மேல்மனத்திலிருந்து, கட்டுப்பாட்டால் உள்ளே போகலாம் என்கிறார் பகவான்.

அந்தக் கட்டுப்பாட்டின் பகுதிகள்:

- ✩ **கடந்த காலத்தைப் பற்றி வருந்துவதில்லை.**
- ✩ **கடந்தது எதையும் மனம் இதமாகப் போற்றக் கூடாது.**
- ✩ **அபிப்பிராயம், பிரியம் போன்ற மனத்தின் சிறு பகுதிகளால் எதையும் பூர்த்தி செய்துகொள்ள முயலக்கூடாது.**

***கட்டுப்பாடு அறியாமையின் கட்டுப்பாட்டை உடைக்கும்.***

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

# அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.150 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | சத் புருஷன் | விஜயா & விசாலம்* | ரூ. 20 |

*சென்னையில் மட்டுமே கிடைக்கும்.

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# ஆசை வெட்கமின்றிக் கேட்கும்

- ✡ ஆசையென உள்ளே எழுந்தால் அதனுடன் அவசரம் வரும்.
- ✡ ஆசைக்கும், அவசரத்திற்கும் வெட்கமோ, பொறுமையோ இருக்காது.
- ✡ அறிவற்றவனுக்குத் தேவையெழுவது ஆசையாகும்.
- ✡ தேவை தெளிவற்றவனுக்கு வந்தால் ஆசையால் பூர்த்தி செய்ய முயல்வான்.
- ✡ ஆசை பூர்த்தியானால், பூர்த்தி செய்தவர் நினைவுக்கு வாராது.
- ✡ அவரை நினைவுபடுத்தினால் எரிச்சல் வரும்.
- ✡ நினைவு வந்தால் அவர் தனக்குத் தொந்தரவு செய்தவர் என நினைவு கூறும்.
- ✡ நன்றியைக் கேட்கும் சமயம் வந்தால் துரோகம் தோன்றும்.
- ✡ அந்த துரோகத்திற்கு ஆசைக்குண்டான அவசரம் உண்டு.
- ✡ அவசரப்பட்டு ஆசையைப் பூர்த்தி செய்தவரைத் துரோகத்தால் அழிக்க முனைந்து செயல்படுவான்.
- ✡ அவன் எண்ணம் விரைவில் பூர்த்தியாகும்.
- ✡ அவன் எண்ணம் அவனில் பூர்த்தியாகும் - அவன் தன்னை விரைந்து அழித்துக்கொள்வான்.

❀❀❀

# ‘‘வைக்கோல் கட்டு’’

படிக்காத கிராமத்துப் பெண். வயதாகிவிட்டது. கல்யாணப் பேச்சு எழும் நிலையில்லை. டவுனில் வீட்டு வேலைக்கு வந்தாள். பெரிய வீடு, அன்பர்கள் வாழும் இடம். சில ஆண்டுகளில் அவள் வாழ்ந்த வாழ்வுக்கும், இப்பொழுதுள்ள வசதிக்கும் சம்பந்தமில்லாதபடி உயர்ந்துவிட்டாள். அவள் வேலை செய்யுமிடத்தில் அவள் திருமணத்திற்குப் பெரிய உதவி செய்ய முடிவு செய்தனர். அவள் அத்தை அங்கு சமையல்காரி. பெண் ரோஷக்காரி. அடிக்கடி கோபித்துக் கொள்வாள். வீட்டு எஜமானி திருமணத்திற்குப் பெரிய உதவி செய்வதாகக் கூறியபின் அத்தையின் அதிகாரம் அதிகமாயிற்று. பெண்ணுக்கு வசதி, திருமண உதவி எல்லாம் தெரியவில்லை. அதிகாரம் வலுத்தவுடன் கோபம் அதிகமாயிற்று. அத்தை, ‘‘இப்படிப் பேசினால் கிராமத்திற்குப் போக வேண்டும். நிலத்தில் வைக்கோல் கட்டு தூக்க வேண்டும் என்று மறந்துவிடாதே’’ என்றாள். பெண் வெடுக்கென,

**"அதற்கென்ன, வைக்கோல் தூக்க வேண்டும் என்றால் தூக்க வேண்டியதுதான்"** என்று கூறினாள்.

அனைவரும் வீட்டில் அன்பர் என்பதாலும், அன்பர்கள் கோபமாக, அறிவில்லாமல், சூடாக, மரியாதையை விடக்கூடாது என நினைத்துக்கொண்டு, அன்னை அதிர்ஷ்டத்தை விட்டு விலகுவதை தினமும் இதுபோல் பார்த்துக்கொண்டிருப்பதால், இவளுடைய சொல்,

***அறியாமையின் மந்திர ஒலியாக அவர்கட்குக் கேட்டது.***

- ➢ **ஆயிரம் காரணங்களுக்காக அன்பர் அன்னையை விட்டு விலகுகின்றனர்.**
- ➢ **அன்னையை நெருங்க அவர்கள் மனத்தில் "ஒரு காரணமும்" தோன்றுவதில்லை.**

❀❀❀